# தமிழன்னையே போற்றி

ஆசிரியர்

கவிதைக்கலைமாமணி

**வீரபாண்டியத்தென்னவன்**

வெளியீடு

**தமிழன்னை தமிழ்ச்சங்கம்**

# விவரம்

நூலின் பெயர் : தமிழன்னையே போற்றி
வகை : கவிதைகள்
மொழி : தமிழ்
ஆசிரியர் © : கவிதைக்கலைமாமணி வீரபாண்டியத்தென்னவன்

முதற்பதிப்பு : டிசம்பர் 2019

வடிவமைப்பு : 'தமிழ்நெஞ்சம்' அமின்
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

வெளியீடு : தமிழன்னை தமிழ்ச்சங்கம்

தமிழ்நாடு

பக்கங்கள் : 72
அளவு : Demy 1/8 (215x140mm)
விலை : 70 ₹

# உள்ளடக்கம்


1. வாழ்த்துரை - திருமிகு கருங்கல் கி கண்ணன் நிறுவனர்
2. திருமிகு பாலு கோவிந்தராசன் தலைவர்
3. திருமிகு இராம வேல்முருகன் பொதுச்செயலாளர்
4. முனைவர் கமலசெல்வராசு துணைத்தலைவர்
5. கவிஞர் துரை அனுராசு இணைச்செயலர்
6. திருமதி கிருபா இணைச் செயலர்
7. மருத்துவர் உசாதேவி கோவிந்தசாமி முதன்மை ஆலோசகர்
8. முனைவர் கிருட்டிணதிலகா மாநில ஒருங்கிணைப்பாளர்
9. திருமதி தே. சர்மிளா ஏஞ்சல் மாநில ஒருங்கிணைப்பாளர்
10. கவிஞர் சோதிபாசு முனியப்பன் மாநிலச்செயற்குழு உறுப்பினர்
11. திருமதி மகேசுவரி கண்ணன் மாநிலச்செயற்குழு உறுப்பினர்
12. திருமதி கீதா ஆறுமுக சாமி மாநிலச்செயற்குழு உறுப்பினர்
13. கவிஞர் நாராயணன் சங்கர் மாநிலச்செயற்குழு உறுப்பினர்
14. திருமிகு பெகின் செசட்டின் மோசசு, குமரி மண்டலச்செயலாளர்
15. கவிஞர் சித்தார்த் பாண்டியன் மதுரைமண்டலத்தலைவர்
16. திருமிகு ஆனந்த் கந்தசாமி சேலம் மண்டலத்தலைவர்
17. திருமதி கிறிட்டினா அருள்மொழி கோவை மண்டலத்தலைவர்
18. திருமதி சந்திராபாய் வேலப்பன் முதன்மை ஆலோசகர் குமரி மண்டலம்
19. திருமிகு நா மூதூரான் சென்னை மண்டலச் செயலாளர்
20. ஆசிரியர் உரை கவிமாமணி வீரபாண்டியத்தென்னவன்
21. தமிழன்னையே போற்றி



# வாழ்க தமிழ்

அன்னை மதுரையை ஆண்ட, ஆளும் மீனாட்சி தாயரின் அருளாசியினால் தன் வங்கிப் பணியினை துறந்து, பொருளாதாரத்தை மறந்து மாமதுரை தமிழ்ச் சங்கம் நிறுவி மாதாந்திர கவியரங்கம் காண்பவரும் ; தாய் மீனாம்பிகை தாயினால் இவர் பாடலினால் மழை பொழிந்த அதிசயம் நிகழ்த்தியவரும், கிட்டத்தட்ட 5750க்கும் மேல் கவியரங்கம்,பட்டிமன்றம் நடத்தியவரும், நமது தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் முதன்மை ஆலோசகரும் எங்களின் வழிகாட்டியும், ஆசானுமான, ஐயா கவிச்சக்கரவர்த்தி வீரபாண்டியத் தென்னவனார் நமது தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கு மனம் கனிந்து, மீனாட்சி தாயரின், மண்டைக்காடு தாயாரின் அருளால், தமிழன்னை ஐயாவின் மனம் நின்று தமிழன்னையைப் போற்றி 1008 (ஆயிரத்து எட்டு) வரிகள் 126 பாடல்கள் எழுதி நமது தமிழன்னை தமிழ்ச் சங்கத்தினரிடம் ஒப்படைத்துள்ளார்.

இப்பாடல் என்னிடம் கார்த்திகை 4 ம் ( 19/11/2019) நாள், செவ்வாய்க்கிழமை மலை சுமார் 8.30 மணியளவில் கட்செவி மூலம் கிடைக்கப்பெற்றேன்.அன்று இரவே 9.30 மணி முதல் 12.30 மணி வரை, தமிழன்னை மற்றும் தேவி மண்டக்காட்டு தாய் படம் முன்பு அமர்ந்து படித்தேன், இரசித்தேன், மகிழ்ந்தேன். குழந்தையாக மாறி துள்ளிக் குதித்தேன். என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

இந்த தமிழன்னை போற்றி பாடல்கள் நமது தமிழ் மொழிக்கு வலுசேர்க்கும், தமிழ் கூறும் நல்லுலகில் தமிழ் மீண்டும் வலுவாகும். இந்தப் பாடல்கள் நிச்சயமாக தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் தலைமை நிர்வாகிகளால் தமிழன்னை பதிப்பகம் தன் முதல் நூலாக வெளிடுவது

மட்டுமல்லாது, விரைவில் ஒலிப்பேழையாக இசையமைத்து வெளியிடவும் திட்மிட்டுள்ளது என்பதை தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் என்ற நிலையில் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன்.

தமிழன்னை தமிழ்ச் சங்கம் சாதி, மதம் பாராதது. தமிழினம் என்ற கோட்பாடுடையது. திருவள்ளுவர், தொல்காப்பியர், திருமூலர், ஔவையார், இளங்கோவடிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், பாரதியார், பாரதிதாசனார் பட்டுக்கோட்டையார், கவியரசு கண்ணதாசன் போன்றோர்களுடன், வெளிநாட்டவர் கிறித்தவரான வீரமாமுனிவரையும், தேவநேய பாவாணர், இசுலாமியரான செய்குத்தம்பி பாவலரையும் இவர்களை போன்ற அனைத்து மக்களையும் ஈன்ற நமது தமிழன்னை நமது ஐயாவை ஈன்று அவர் காலத்தில் நம்மையும் ஈன்று தமிழுக்கு தொண்டாற்ற, தமிழ் பரப்ப வைத்து நமது பேறு என்று நான் கருதுகிறேன்.

இந்நூல் மாபெரும் வரலாற்றில் இடம் பெறும். அனைத்து தமிழர்கள் வீடுகளில் வழிபாட்டு நூலாக இடம் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஐயாவின் தமிழ்ப் பற்று அவரின் தமிழ்த் தொண்டு இலக்கிய உலகில் ஒளி நட்சத்திரமாகப் பேசப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த நேரத்தில் தமிழன்னையை வணங்கிப் போற்றி ஐயா மூலம் தமிழ் கூறும் நல்லுலகிற்கு இன்னும் அரிய விடயங்கள் நூலாகக் கிடைத்திட எல்லாம் வல்ல தாயான இறைவி தமிழன்னையை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

வளர்க தமிழ்

இவண்

கருங்கல் கி. கண்ணன்
நிறுவனர்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# தமிழன்னையே போற்றி! போற்றி!

என்னுயிராம் தமிழன்னை என்றென்றும் வாழ்க.
எல்லோரும் தன்னுயிராய் எப்போதும் கொள்க.
இன்பத்தின் ஊற்றாகும் இலக்கியங்கள் சான்று.
இயன்றவரை மனத்தினிலே எந்நாளும் ஊன்று.
சின்னதொரு உள்ளத்தில் சிக்காமல் வாழ
சிறப்பாக உழைத்திடுங்கள் சீர்தூக்கி வெல்ல.
அன்பாகப் பழகிடுவோம் அனைவரும் ஒன்றே.
அருந்தமிழை உயர்த்திடுவோம் அகிலத்தில் நன்றே.

வானத்தில் மிதக்கின்ற வளமான சொற்கள்
வசமான எண்ணத்தால் வண்ணத்தால் இனிக்கும்.
கானத்தில் மயக்கிடுமே கனிகின்றப் பாட்டால்
காதினிலே இனித்திடுமே காற்றினிலே கலந்தால்
தானத்தில் சிறந்திடுமே தவத்தினிலே நிலைத்தே
தமிழமுதை ஊட்டிடுக தரணியிலே நிறைந்தே.
மானத்தில் மனிதரினில் மதிநிறைந்தோர் தமிழர்
மனந்திறந்தே போற்றிடுவோம் மாத்தமிழை இனிதே.

மொழியினிலே தமிழென்றே முழக்கிடுவாய் வானாய்
மூச்சினிலே கொண்டிடுக முத்தமிழும் தேனாய்.
வழியினையே தேடிடுக வாய்ப்புகளும் பெருக.
வறுமையையும் போக்கிவிட்டு வளமுடனே வாழ்க.
பழியென்றால் அஞ்சிடுக பாசத்தால் நனைந்தே.
பாறைகளும் தூளாகும் பார்வையிலே கனிந்தே.
விழிகளிலே எரிமலையாய் வீறுகொண்டே எழுக.
விதைத்திடுவாய் சிந்தனையை வெற்றிகளைப் பெற்றே.

கோவிந்தராசன் பாலு, கும்பகோணம்.
தலைவர் தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்



# வாழ்த்துரை

தமிழன்னை தமிழ்ச்சங்கம் ஒரு நீண்ட நெடிய சரியான நிலையான இலக்கை நோக்கிப் பயணிக்கும் ஒரு சங்கம் என்பதை அவ்வப்போது நிலைநிறுத்திக் கொண்டு தனது கொள்கையிலிருந்து சிறிதும் வழுவாது பயணிப்பதில் சிறந்து விளங்குகிறது. கவிஞர்களிடம் யாதொரு தொகையும் பெற்றுக் கொள்ளாது கவியரங்கம் நடத்துதல் கவிஞர்களின் புத்தகங்களை நூலாக்கி வெளியிடுதல் போன்றவையும் அதன் நோகக்கங்களில் அடங்குவனவாம். இது வரை தொகுப்பு நூல் வெளியிட்ட தமிழன்னைத் தமிழ்ச்சங்கம் இப்போது தமிழன்னையைப் போற்றும் விதமாக, தமிழ்த்தாயைத் துதிக்கும் விதமாக 1008 போற்றிகளை உள்ளடக்கிய ஒரு பாமாலையை நூலாக வெளியிடுகிறது. இதன் ஆசிரியர் நாடறிந்த நல்ல கவிஞர் கவிதைக் கலைமாமணி ஐயா வீரபாண்டியத்தென்னவன் அவர்கள். மாதந்தோறும் மதுரையில் விடாமல் 40 ஆண்டுகளுக்கும் மேலாக கவியரங்கங்கள் நடத்தி இதுவரை 5000 கவியரங்கங்களைத் தாண்டிச் சென்று வெற்றி நடைபோடும் ஆசு கவி. கலியுக காளிதாசர். அவர் எழுதிய இந்நூலை தமிழன்னைத் தமிழ்ச்சங்கம் தனது இரண்டாவது ஆண்டுவிழாவில் வெளியிடுகிறது என்பதில் எல்லையில்லா இறும்பூதடைவதோடு நானும் இந்த சங்கத்தில் இருக்கிறேன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். இதுபோன்ற பல நூல்களை வெளியிட மனதார வாழ்த்துகிறேன்.


**இராம வேல்முருகன்,** வலங்கைமான்
பொதுச்செயலாளர்
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்



# தமிழன்னையை
# வணங்கிப் போற்றுவோம்!

தமிழன்னையின் தவப்புதல்வன்
தேனினியக் கவிபாடும் திறன் கொண்டோன்
தமிழன்னை தமிழ்ச்சங்கத் தலைமை ஆசான்
வீரபாண்டியத் தென்னவனார்!
தமிழன்னை போற்றி படைத்திட்டார்
ஆயிரத்தெட்டு போற்றி... போற்றி...
அகிலமே போற்றிடும் தமிழன்னைக்கு
மகுடமாய் அமைந்ததே தென்னவனார் போற்றி!

திக்கெட்டும் தமிழன்னை புகழ் பரப்பிட
தமிழன்னை தமிழ்ச் சங்கம் கண்டிட்ட
கருங்கல் கண்ணனுக்கு இஃது ஓர் அற்புதம்!
மண்டைக்காட்டு அம்மனும் மதுரை மீனாட்சியும்
ஈரேழுலகத்து தேவாதி தேவர்களும்
கண்ணனுக்கு அருள்பாலித்து காரியங்கள்
கைகூட நித்தமும் தமிழன்னையை போற்றுவோம்
சங்கத்தோரே... தமிழன்னை தமிழ்ச் சங்கத்தோரே!

கவிஞர் கமல. செல்வராஜ்
துணைத்தலைவர்
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்
அருமனை
கன்னியாகுமரி மாவட்டம்.



# வாழ்த்து...

தமிழன்னை தமிழ்ச்சங்கம் தழைத்தோங்கும் தரணியிலே
தமிழார்வம் கொண்டோரே தமிழ்வளர்க்க வாரீரே..
தமிழ்த்தாயின் ஆலயத்தை தனித்துவமாய் நாமமைப்போம்
தமிழுக்கு நம்மாலானத் தனிச்சிறந்த பணியிதுவே..!

தமிழன்னையைப் பாடுவதற்குத் தமிழிலே பாமாலை
தந்திட்டார் தென்னவரும் தமிழினிக்க கவியாலே..
தமிழன்னை தமிழ்ச்சங்கம் தரணியிலே சிறந்திடவே
தழைத்தோங்கும் நாள்தோறும் தமிழ்மணக்க படித்திடவே..

ஆயிரத்தெட்டுப் போற்றிகளும் அழகான கவிச்சரமே
ஆலயத்தில் தொழுதிடவே அன்னையவள் மகிழ்வாளே
ஆசையுடன் நீங்களிதை அவசியமாய் படித்திடவே
ஆண்டுவிழா இந்நாளில் அறிமுகமாகிறது அறிவீரே..!

என்றும் தமிழ்ப்பணியில்,

துரை. அனுராசு
மாநில இணைச்செயலர்
தமிழன்னை தமிழ்ச்சங்கம்.



# வாழ்க தமிழ்

மா மதுரை தமிழ்ச் சங்க நிறுவனரும் நமது தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் முதன்மை ஆலோசகரும் எனது குருநாதருமான சித்தர் ஐயா கவிச்சக்கரவர்த்தி வீரபாண்டியத் தென்னவர் ஐயா அவர்கள் தமிழன்னைக்கு 1008 வரிகளில் மிகவும் அற்புதமாக பாமாலை தொடுத்துள்ளது எனக்கு மட்டும் அல்ல, எமது சங்கத்தினருக்கு மட்டுமல்ல, அகில உலக தமிழர்களுக்கே மகிழ்ச்சி தரும் விடயம்.

ஐயா மேலும் நூல்கள் பல தரவேண்டும். ஐயா அவர்கள் சங்கக் கவிஞர் வரிசையில் தமிழ் உள்ளவரை போற்றப்படுவார் என்று கூறி வணங்குகிறேன்.

வாழிய ஐயா நாமம்

இவண்

திருமதி. கிருபா
இணைச்செயலாளர்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# வாழ்த்துரை

நமது தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் முதன்மை ஆலோசகர் எமது குருநாதர் வாழும் சித்தர் கவிச்சக்கரவர்த்தி வீரபாண்டித் தென்னவர் அவர்கள் நமது சங்கத்தின் மாநிலச் செயற்குழுவினர் வேண்டுதலால்; மதுரை ஆளும் அரசி மீனாட்சி அன்னையின் அருளாசியால் இப்புத்தகத்தில் தமிழன்னை போற்றி 126 பாடல் 1008 வரிகளில் எழுதியுள்ளார்.

இப்பாடல் நிச்சயமாக தமிழ் மக்கள் மனதில் குடிகொள்ளும். தமிழன்னை ஆலயத்தில் மந்திரப் பாடலாக ஒலிக்கும். வரலாற்றில் இப்பாடல் பதிவாகும்.

ஐயாவை வணங்கி போற்றுவதன் மூலம் தமிழன்னையை வணங்கி போற்றுகிறேன். ஐயாவின் பக்தையாக நான் இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்

இவண்

மருத்துவர் திருமதி. உசாதேவி கோவிந்த சாமி
முதன்மை ஆலோசகர்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# வாழ்த்துப்பா

தமிழன்னைத் தவப்புதல்வருக்கு,
தரணி போற்றும் தமிழருக்கு,
மதுரைமீனாள் திருமகனாருக்கு,
மங்காப்புகழ் மன்னவருக்கு,
மனமார்ந்த வாழ்த்துகள்!

திங்கள்தோறும் பாவரங்கம்
கவிஞர் போற்றும் கவியரங்கம்
திறமைக்குப் பரிசு பலதருகின்ற
தென்னவருக்கு என் வாழ்த்துகள்!

மதுரையின் மரபுக்கவி
சிந்தையில் சிறந்த கவி
பைந்தமிழில் பாப் பாடி
படைத்திட்டார் போற்றியகவல்!

தமிழன்னை மனம் குளிர
வளையாத மனம் வளைய
வகையாக வானவில்லாய்
வண்டமிழ்ப் போற்றி பாடினார்
வாழ்த்துகள்!

புவி போற்ற பிறந்தவரே!
பொற்றாமரை மண்ணிலே
படைத்தாரே கவிப்புதையல்!
பல்லாண்டு வாழ்கவே!

மூவேந்தர் முனைந்த தமிழ்!
முக்கனியாய் சிறந்த தமிழ்!
முத்தமிழாய் முகிழ்த்த தமிழ்!
முகம்மலரச் செய்தாரே!

ஓய்வறியா உம் உழைப்பால்
செந்தமிழும் சிறந்ததே!
ஆய்வறிய வைத்திட்டீர்
அருந்தமிழ்ச் செல்வரே!

தமிழன்னை தமிழ்ச்சங்கம்
தமிழன்னை ஆலயம் கண்டிட
துணை நின்றீர்! தூணே வாழி!
தவப்புதல்வரே!தரணிபோற்ற
வாழிய ...வாழியவே!
வாழ்க தமிழ்!வளர்க தமிழ்!

முனைவர் கிருட்டிணதிலகா
மாநில ஒருங்கிணைப்பாளர்
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்

22 / 11 / 2019



# வாழ்த்துரை

தமிழன்னையின் புதல்வரே!
தமிழுக்காய் பிறந்தவரே!
கவிக்கெல்லாம் சக்கரவர்த்தியாரே!
வீரபாண்டிய தென்னவரே!
தமிழ் சங்கத்தின் ரெத்தினமே!

இலக்கியத்தின் நாயகரே!
ஏழிசையின் இசைச்சுரமே!
பாட்டினிலே மெட்டெடுத்தாய்
சந்தங்களின் அணிதொடுத்தாய்
தமிழுக்காய் வாழ்வெடுத்தாய்

வரலாற்றின் பொக்கிசமே
சமத்துவத்தின் மறுவுருவே
தமிழுக்காய் சருகானாய்
செல்வங்களை வாரியிறைத்தாய்
துன்பங்களை நீ சுமந்தாய்

தமிழுக்காய் பண்ணிசைத்தாய்
தமிழையே போற்றுகின்றாய்
தமிழன்னை தீபமே
உம்மை யாம் போற்றுகிறேன்
உலக மக்கள் போற்றிடுவார்

கடைச்சங்கம் மட்டுமில்லை
உம்மாலும் ஒரு சங்கம்
அதுவே தமிழன்னை தமிழ்சங்கம்
உம்மால் உயர்ந்து நிற்க்கும்
உம்மை போற்றி நிற்கும்

உம்பாடலை வணங்குகிறேன்
உம்மை யான்போற்றுகிறேன்
உலகமே வாழ்த்து கூறும்
தமிழன்னை போற்றி பாடலுக்காய்
வீரபாண்டி தென்னவரே வாழ்க
தமிழன்னையே வாழ்க! வாழ்க!

தே. சர்மிளா ஏஞ்சல்.
ஒருங்கிணைப்பாளர்
கூடுதல் பொறுப்பு பொருளாளர்
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்



# வாழ்த்துக்கவிதை

சித்தராய் வாழும் தென்னவன் அய்யா
சீர்மிகு தமிழை நமக்குதான் தந்தார்...!
முத்தென உதித்து மூவுல குமாள
முத்திரை யாக வந்துநின் றாரே...!
சித்திரை நிலவாய் சிந்தையில் வந்தார்
செந்தமி ழையும் செம்மையாய்த் தந்தார் ...!
தத்துவம் சொல்லி தவப்புதல் வனாக
தமிழரெ னநின்று தமிழையும் வளர்த்தார் ...!

ஆலயம் அமைக்க அழைத்தார் நம்மை
அவனியில் யாவரும் வணங்கி மகிழவே...!
வேலாய் நின்று வேண்டியே வந்தார்
வேங்குழல் போல வேதமாய் சொல்லி...!
ஆலமரம் போல ஆயிரத் தெட்டுப்
பாவையும் அருமையாய் போற்றியைப் பாடி ...!
பாலக னாகப் பாதைக் காட்டி
பாவையும் தந்தார் பக்கம் கூட்டி ...!

ஜோதிபாஸ் முனியப்பன்
மாநில செயற்குழு உறுப்பினர்
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்
சென்னை



# தமிழன்னையை போற்றி வணங்கிடுவோம்...

அடிவரார்
தமிழன்னை புகழ் பாடும்
தென்னகத்து மாமதுரை தமிழ்ச் சங்கம் கண்ட
மாமன்னர்...
கவிச்சக்கரவர்த்தியார்
வீரபாண்டித் தென்னவனார்...
மீனாட்சி அன்னை அகம்
கொண்டார்!...
தமிழன்னை போற்றி
ஆயிரத்து எட்டு கண்டார்!...
அவனியியே பாடும்!
அகிலத்தில் நிலைக்கும்!
தமிழுக்கு வளர்ச்சி கூட்டும்!...

செந்தமிழ் மொழிக்கு
சிங்கத் தாரகையானவள்
அன்னல் மொழியாளுக்கு
ஆலயமும் அமைந்திடவே...

சங்கத் தமிழின்
சொற்களில் பாவியற்ற
மங்காத உன்புகழ்
மாண்புற உயர்த்திடவே...

ஆலயம் செய்து
அறப்பணி ஆற்றுவோமே-தாயே
காலமும் கடிதே
காத்து நிற்க வேண்டுமா..!

முப்பெரும் தேவியருக்கும்
முதலாமவள் நீயே -தாயே...
எப்புகழ் பாடினாலும் ஈடில்லை உனக்கு...

அன்னையுன் திருப்பாதம்
அமைந்திட
ஆசிகள் வழங்கிடு
பண்பாளர்கள் பாவினில்
புரிதலாய் இணங்கிடு

பற்றாகி உன்னாலே
பித்தாக மாறினோம்
நற்கருணை வழங்கி
நல்வழி காட்டு -தாயே

ஐயா உருவில் நீ வாருவாய்!
அவர் மூலம் தமிழமுதம் தருவாய்!
ஐயாவை வணங்குகிறேன் தாயே!
அவர் மூலம் உன்னை போற்றுகிறேன் தமிழே!...

மகேசுவரிகண்ணன்
மாநிலச் செயற்குழு உறுப்பினர்



# கலியுக சித்தரே

தென்னாட்டில் பிறந்த வீரபாண்டியத் தென்னவரே

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த
மதுரை மண்ணின் மைந்தரே

நெற்றிக்கண் திறந்தாலும்
குற்றம் குற்றமே என்ற நக்கீரர்
வழியில் வந்த சன்றோரே

தமிழ் கூறிய வழிககளை
நெறிமுறை படுத்தி வாழ்பவரே

கலியுகத்தில் வாழும் சித்தரே
வள்ளுவரையும் ஔவையின்
வழித்தடத்திலும் நடந்துவரும்
புலமை மிக்கவரே

தங்களை
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
வணங்குகிறேன் ஐயா

இவண்

திருமதி. கீதா ஆறுமுகசாமி
மாநிலச் செயற்குழு உறுப்பினர்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# வாழ்த்துரை

பாண்டியனார் தமிழ் வளர்த்த மதுரையிலே
மீண்டும் தமிழ் மணக்க தமிழ் வளர்க
தென்னாட்டு பாண்டியனார் வந்து உதித்தார்
தமிழ் பேச்சு தமிழே மூச்சு
கவி முழக்கம் அதிலே அவை அடக்கம்
தமிழ் முழக்கம் இதிலே பாறைக்கும்
தமிழ் உணர்வு தானே பிறக்கும்
தமிழ் அன்னை போற்றும் ஆயிரம்,
போற்றி படிக்க படிக்க சுவைக்கும்
தமிழ் போற்றியையும்
தென்னவன் ஐயாவையும் வணங்குவோம்

நாராயணன் சங்கர்
மாநில செயற்குழு உறுப்பினர்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# வாழியத் தமிழ்

**உ**லகம் போற்றும் அற்ப்புதத் தாய் தமிழன்னையினை போற்றி தொண்டாற்றி வாழும் சித்தர், தமிழன்னை தமிழ்ச் சங்கத்தின் முதன்மை ஆலோசகரும் தலைமை ஆசானுமான வணக்கத்திற்கும் போற்றுதலுக்குரிய ஐயா கவிச்சக்கரவர்த்தி வீரபாண்டியத் தென்னவனாரில் 1008 வரிகளில் 126 பாடல்களில் எழுதப்பட்ட தமிழன்னை போற்றி தமிழ் கூறும் நல்லுலகில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு எளிச்சி ஊட்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தமிழன்னையை வணங்கி ஐயாவின் அடியரான நான் ஐயாவை போற்றுகிறேன்.

இவண்

பெகின் செசுட்டின் மோசசு
குமரி மண்டலச்செயலாளர்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# உச்சரிக்கத் தமிழ் பெருகும்....

பொங்குதமிழ்த் தாயவளின் சீரைப்
போதகன்ற கவிமலரால் கோர்த்து
தங்குதடை ஏதுமின்றி அன்னைத்
தனிக்கருணைத் தான்பெருகி வாழ்த்த
இங்குவொரு ஆயிரத்து எட்டாம்
இசைபெருகும் போற்றியினைத் தந்தார்
எங்கரத்து வணக்கத்துக்கு உரியர்
ஏறுதமிழ்த் தென்னவராம் பெரியார்

சங்கமெனும் அவைபெருகி நின்று
சார்புலவர் நெஞ்சமிடை சென்று
எங்குமொரு வாசமெனக் காற்றாய்
எண்டிசையும் கவிபெருகச் செய்த
தங்கமவள் எம்குலத்தின் தெய்வம்
தமிழணங்கு தென்மதுரைப் பாவை
உங்களகம் தன்னருளைப் பொழிய
உச்சரித்திப் போற்றியினைச் சொல்வீர்

பங்கமிலாத் தமிழ்பெருகத் தொழுது
பைந்தமிழின் அருளதனை வேட்டி
குங்குமத்து நுதலுடைய செல்வர்
கூறுவீர பாண்டியராம் தென்னர்
வெங்கலத்து மணித்தமிழாம் தாயை
வேண்டுதற்கு தந்ததிந்தப் போற்றி
அங்கமெலாம் அன்புருக இஃதை
அறைபவர்க்கு தமிழ்பெருகும் ஆம்ஆம்

சித்தார்த்பாண்டியன்
மதுரை மண்டலம் தலைவர்,
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்
9842386995



# தமிழன்னையை வணங்கி ஐயாவை போற்றுவோம்...

சொந்தங்கள் ஒன்று கூடி, சோதனைகள் பல கடந்து, வாழும் கவி ஆசானாரின் வழிகாட்டுதலின் பேரில், வண்ணத்தமிழ் சொல்லெடுத்து.. தமிழன்னை மனம் மகிழும் நிலையில் ஐயா கவிச்சக்கரவர்த்தி வீரபாண்டியனார் அவர்கள் 1008 தமிழன்னை போற்றி எழுதி படைத்தது தமிழ் மொழிக்கும் தமிழன்னைக்கும் அவர் செய்யும் மகத்தான தொண்டு என்பதே உண்மை. ஐயாவின் இப்பாடல் தமிழ் உள்ளவரை நிலைத்திருக்கும். ஐயா அவர்களை வணங்குகிறேன் வாழ்க தமிழ் .

இவண்,

ஆனந்த் கந்தசாமி,
சேலம் மண்டலத் தலைவர்,
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# வாழ்த்துரை

மொழி என்பது உணர்வின் வெளிப்பாடு. தன் வளர்ச்சிக்கு தொய்வு வரும் வேளையில் தன்னைத் தானே தகவமைத்துக் கொள்ளும் தன்மை பெற்றது மொழி. ஒவ்வொரு காலகட்டங்களிலும் இது தொடர்ந்து நடந்து வருகிறது. பிற மொழி கலப்பு, அல்லது சிதைவு போன்ற நேரங்களில் மூச்சுவிட ஏதாவது மொழிப் பற்றாளர்கள் பிறப்பது கால நிகழ்வு. அவர்களை அடையாளங் கண்டவுடன் பற்றிப் படர்ந்து தொற்றிக் கொள்கிறது அன்னை கண்ட பிள்ளையாய்.

தமிழன்னை போற்றி என்று போற்றிப் போற்றிப் பாடிய அத்தனைப் பாடல்களும் நமக்கு கிடைக்க அருள் செய்த தமிழன்னையும், பாடிய ஐயா வீரபாண்டியன் தென்னவன் அவர்களும் நாம் காலத்தில் நாம் பெற்ற பேறு. ஒவ்வொரு போற்றிக்குப்பின்னும் இருக்கும் கடலாழக் கருத்துக்கள் தடையின்றி அலையலையாய் வந்து விழுவதை, எதிர்காலம் வியந்து பாராட்டும். அவருடன் முகமுகமாய் பழக கிடைத்த வாய்ப்பு மிக பாக்கியம்.

இந்தக் காலத்திலும் பிற மொழி ஆதிக்கமும் ஆர்வமற்ற மந்தநிலையிலும் தன்னை உயிர்ப்பிக்க தமிழ் தேர்ந்தெடுத்த நற்செம்மல் ஐயா வீரபாண்டியன் தென்னவனார் அவர்கள். அந்த வைரத்தைப் பதிக்கும் தங்கமாக கருங்கல் கண்ணன். ஆபரண நிறைவுக்கு தமிழாசன் கோவிந்தராஜன் பாலு அவர்கள் கூடவே வலங்கைமான் வேல்முருகன் அவர்கள். மொழி உற்சாமாய் தன் இளமைப் பொலிவை தக்க வைத்துக் கொள்ள வேறு யார் வேண்டும் இவர்களுக்கு மேல். தான் அமரும் ஆலயம் அமைவதைப் பார்க்க தமிழன்னையின் ஆர்வம் நம்மை வணங்க வைக்கிறது. வணங்கும் கரங்களுக்கு உழைக்கவும் பிறரை அழைக்கவும் தெரியும், முடியும். தொடர்ந்து ஆலயப்பணி சிறக்க பிராத்தனையும் வாழ்த்துகளும்.

கிறிஸ்டினா அருள்மொழி



# வாழ்த்துரை

தமிழன்னையே போற்றி போற்றி

ஐயா வாழும் சித்தர் கவிச்சக்கரவர்த்தி வீரபாண்டியனார் அவர்களின் 1008 வரிகளில் 126 பாடல்களைக் கொண்ட தமிழன்னை போற்றி பாமாலை தமிழன்னை அருளால் தமிழ் உள்ளவரை நிலைத்திருக்கும், ஐயாவின் பெயர் வள்ளுவர் ,ஔவை,பாரதியார் போன்று வாழ்வாங்கு வாழும். இந்நூல் வெளிவர காரணமாக இருக்கும் தமிழன்னை தமிழ்ச் சங்கம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை எனக் கூறி ஐயாவை வணங்குகிறேன்.

வெல்க தமிழ்-

இவண்


திருமதி. இந்திரா பாய் வேலப்பன்
ஓய்வு முதுநிலை ஆசிரியர்
மண்டல முதன்மை ஆலோசகர்
குமரி மண்டலம்
தமிழன்னை தமிழ்ச் சங்கம்



# வாழ்த்துக்கவிதை

வீர பாண்டிய தென்னவ ஐயனே
அன்னையை போற்றியே அவளையே வேண்டியே
பக்தியில் போற்றியே சக்தியை கொண்டுநீ
சிந்தையில் வென்றுநீ செந்தமிழ் கற்றுநீ
முத்தமிழ் போற்றிநீ முக்தியை பெற்றுநீ
பித்துநீ பற்றியே சித்துநீ பெற்றயோ

முத்துநீ முதல்வன்நீ மதுரையின் அழகுநீ
அமுதுநீ அறிவுநீ அட்சய பாத்திரம்நீ
தமிழுக்கு கோவிலாம் தம்பிக்கு ஆணையாம்
அன்னையின் வேண்டுகோள் அன்பரின் கனவிலாம்
தரணியில் கட்டுவோம் அன்னையைப் போற்றுவோம்
தமிழ் அன்னையை போற்றுவோம்

நா மூதுாரான்
சென்னை மண்டலச் செயலாளர்
தமிழன்னைத் தமிழ்ச்சங்கம்



# ஆசிரியர் உரை

தமிழன்னை தமிழ்ச்சங்கம் வெளியிடும் இரண்டாவது நூலாக எனது நூல் அமைந்துள்ளது குறித்து எனக்கு மட்டற்ற மகிழ்வே. தமிழன்னையைத் தெய்வமாக எண்ணி எழுதப்பட்ட இந்நூல் ஒவ்வொரு தமிழனும் பிற்காலத்தில் பூசை அறையில் வைத்து வழிபடும்போது பூசிக்க வேண்டிய நூலாக மாறும். தமிழன்னைக்கு ஆலயம் அமைத்து சிலை வைத்து வழிபடும் போது இந்நூலில் உள்ள 1008 போற்றிகளும் அங்கே அன்னையை வணங்கும் போது போற்றிப்பாடப் பயன்படும் என்பது திண்ணம்.

இத்தகைய நூலை எழுத என்னைப் பணித்த இறைவனுக்கும் தமிழன்னை தமிழ்ச்சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக் கொன்கிறேன் .

வணக்கங்களுடன்


கவிதைக்கலைமாமணி
சி. வீரபாண்டியத்தென்னவன்

மனை எண் 19
சிவசெந்தூர்பாண்டியன் இல்லம்
சொர்ணமீனா நகர் முதல்தெரு
யா. ஒத்த கடை 635 107
மதுரை

9842181462

உ

# தமிழன்னையே போற்றி

1

அன்னையேஎன் தமிழ்த்தாயே போற்றி போற்றி
ஆதிமுதல் மொழித்தாயே போற்றி போற்றி
தென்மதுரைப் பிறந்ததாயே போற்றி போற்றி
தமிழ்முருகன் தன்தாயே போற்றி போற்றி
என்றுமுள செம்மொழியே போற்றி போற்றி
ஏழிசையாய் ஆனதாயே போற்றி போற்றி
உன்னடியைப் பணிகின்றேன் போற்றி போற்றி
ஓம்சக்தி பைந்தமிழே போற்றி போற்றி

2

அம்மையப்பன் பேச்சுமொழி போற்றி போற்றி
அம்பிகையின் மூச்சுமொழி போற்றி போற்றி
கும்மியாட்டக் கோலமொழி போற்றி போற்றி
குமரிமக்கள் காலமொழி போற்றி போற்றி
தும்பிகளின் சந்தமொழி போற்றி போற்றி
தூயநாதச் சொந்தமொழி போற்றி போற்றி
செம்பொருளின் இயற்கைமொழி போற்றி போற்றி
சிவசக்திப் பக்திமொழி போற்றி போற்றி

3

காலத்தை வென்றதாயே போற்றி போற்றி
காவியமாய் நின்றதாயே போற்றி போற்றி
வாலறிவாய் வாழ்தாயே போற்றி போற்றி
வந்தெம்மை ஆளுவாயே போற்றி போற்றி
கோலத்தில் குறைவில்லாய் போற்றி போற்றி
குவலயத்தின் தமிழரசி போற்றி போற்றி
ஆலமர்ந்தார் அகத்தொலியே போற்றி போற்றி
அழகுமீனா முகத்தொளியே போற்றி போற்றி

4

பூக்குழியில் நடந்ததாயே போற்றி போற்றி
புவியாள வந்ததாயே போற்றி போற்றி
வாக்கினிலே நிறைந்ததாயே போற்றி போற்றி
வைகையிலே தவழ்ந்ததாயே போற்றி போற்றி
பாக்களான பைந்தமிழே போற்றி போற்றி
பேசவைத்த பேரரசி போற்றி போற்றி
தேக்குமரத் திண்மையளே போற்றி போற்றி
தென்புலத்தார்அன்னையளே போற்றி போற்றி

5

தென்குமரித் திருமகளே போற்றி போற்றி
திரவியமாய் இருந்ததாயே போற்றி போற்றி
குன்றவேலன் வாய்மொழியே போற்றி போற்றி
குலதெய்வம் ஆனதாயே போற்றி போற்றி
இன்றிருக்கும் மதுரமொழி போற்றி போற்றி
எழுஔவை மணிமொழியே போற்றி போற்றி
அன்றுவந்த திருமொழியே போற்றி போற்றி
அமுதத்தொல் காப்பியமே போற்றி போற்றி

6

சித்தர்கள் உரைத்ததமிழ் போற்றி போற்றி
சிவனடியார் மொழிந்ததமிழ் போற்றி போற்றி
முத்தமிழாய் விரிந்ததமிழ் போற்றி போற்றி
முறையாக நிறைந்ததமிழ் போற்றி போற்றி
பத்துப்பாட் டானதமிழ் போற்றி போற்றி
பழகிடவே சிறந்ததமிழ் போற்றி போற்றி
இத்தரையில் நிலைத்தாயே போற்றி போற்றி
இயலிசையின் குயில்மொழியே போற்றி போற்றி

7

ஆட்சியிலே இருந்ததமிழ் போற்றி போற்றி
அயலாரும் படித்ததமிழ் போற்றி போற்றி
மீட்டுகின்ற மெல்லிசையே போற்றி போற்றி
மிடுக்குடனே நடந்ததமிழ் போற்றி போற்றி
வேட்பமொழி அறிவொளியே போற்றி போற்றி
விதைநெல்லாய் விளைந்ததமிழ் போற்றி போற்றி
ஏட்டினிலே தலைநிமிர்ந்தாய் போற்றி போற்றி
எழுச்சிநலம் தரும்தாயே போற்றி போற்றி

8

வடபெருங்கல் சிகரமானாய் போற்றி போற்றி
வரலாறு படைத்தமிழ் போற்றி போற்றி
கடல்குடித்தார் அமுதமொழி போற்றி போற்றி
கவிழாத காவியமே போற்றி போற்றி
மடல்அவிழ்த்த மணத்தமிழே போற்றி போற்றி
மூவேந்தர் தாய்மொழியே போற்றி போற்றி
கொடிபிடித்து நடந்ததாயே போற்றி போற்றி
கோபுரமாய் ஆனதாயே போற்றி போற்றி

9

மாமதுரைச் சங்கமகள் போற்றி போற்றி
மாணிக்கப் பாட்டரசி போற்றி போற்றி
கோமகளாய் மலர்தமிழே போற்றி போற்றி
கொலுவிருக்கும் உயர்தமிழே போற்றி போற்றி
தேமதுரச் சொல்லமுதே போற்றி போற்றி
தெம்மாங்குத் தண்தமிழே போற்றி போற்றி
பூமலர்கள் பூப்பொலியே போற்றி போற்றி
பொற்றமிழர் நற்றவமே போற்றி போற்றி

10

கவியரங்கில்  விளைகலையே போற்றி போற்றி
கலையரங்கில் உயிர்ச்சிலையே போற்றி போற்றி
செவியரங்கில்  நிறைதேனே போற்றி போற்றி
செயலரங்கில்  சுழல்ஒளியே போற்றி போற்றி
புவியரங்கில் நிமிர்கிளியே போற்றி போற்றி
பறந்துவரச்  சிறந்தபண்ணே போற்றி போற்றி
தவக்கொழுந்தே தனித்துவமே போற்றி போற்றி
தமிழ்ச்சங்க மணிக்குரலே போற்றி போற்றி

11

தனித்தன்மை  நிறைமொழியே போற்றி போற்றி
தனக்குவமை இல்லாதாய் போற்றி போற்றி
இனித்தநிலை  குறையாதாய் போற்றி போற்றி
எழுச்சிநடை போட்டிடுவாய் போற்றி போற்றி
தனித்தொலிக்கும்  திறத்தமிழே போற்றி போற்றி
தரத்தினையே  விரித்ததமிழ் போற்றி போற்றி
பனிமலராய்ப்  பிறந்ததமிழ் போற்றி போற்றி
பழமதுரைச் செங்கரும்பே போற்றி போற்றி

12

அனல்வாதம்  வென்றதாயே போற்றி போற்றி
அகம்புறமாம்  நின்றதாயே போற்றி போற்றி
புனல்வாதச்  சுவடியானாய் போற்றி போற்றி
பெருங்கவிதைப் பேழையானாய் போற்றி போற்றி
தனிக்கருணைச் செம்மொழியே போற்றி போற்றி
தரம்திறமும் செழித்ததாயே போற்றி போற்றி
இனித்ததமிழ்  எங்களம்மா போற்றி போற்றி
இருந்தாளும் நறுந்தமிழே போற்றி போற்றி

13

பொrபோர்கள் கொடுத்ததமிழ் போற்றி போற்றி
பிழையின்றி நடந்ததமிழ் போற்றி போற்றி
அரசருமே படித்ததமிழ் போற்றி போற்றி
அரங்கேறிச் சிறந்ததமிழ் போற்றி போற்றி
வரலாற்றில் தமிழியானாய் போற்றி போற்றி
வடுவின்றி வளர்ந்ததமிழ் போற்றி போற்றி
தரமுடனே இருந்ததாயே போற்றி போற்றி
தமிழ்ச்சங்கத் தலைமகளே போற்றி போற்றி

14

அங்காடி மொழிந்ததமிழ் போற்றி போற்றி
அணிமணிகள் பொழிந்ததமிழ் போற்றி போற்றி
சிங்கநடை நடந்ததமிழ் போற்றி போற்றி
செழுமையுடன் சிறந்ததமிழ் போற்றி போற்றி
தங்குதடை எதுவுமிலாய் போற்றி போற்றி
தமிழகத்தை ஆண்டதமிழ் போற்றி போற்றி
எங்கிருந்தும் முழங்கிடுவாய் போற்றி போற்றி
இளமைநலம் செழித்திடுவாய் போற்றி போற்றி

15

தமிழென்ற அருட்சக்தி போற்றி போற்றி
தாய்தந்த பொற்கிழியே போற்றி போற்றி
நமதுமுன்னோர் ஒலிமூச்சே போற்றி போற்றி
நடையாறு வழிவீச்சே போற்றி போற்றி
தமதெழுத்தின் உயிரொலியே போற்றி போற்றி
தெளிந்துவந்த மணிப்பரலே போற்றி போற்றி
இமிழ்கடலாய் விளங்குதமிழ் போற்றி போற்றி
எழுகதிராய்த் துலங்குதமிழ் போற்றி போற்றி

16

திருப்புகழாய் விளைந்ததமிழ் போற்றி போற்றி
திருமுறைகள் நிறைந்ததமிழ் போற்றி போற்றி
மருவற்ற நற்றமிழே போற்றி போற்றி
மலர்ந்திருக்கும் குறுந்தொகையே போற்றி போற்றி
கருத்தமைதித் திருவுடையாய் போற்றி போற்றி
கவிவாணர்; படைத்ததமிழ் போற்றி போற்றி
இருநுhற்று நாற்பத்தேழ் போற்றி போற்றி
இருப்பினிலே சிறப்படைந்தாய் போற்றி போற்றி

17

தென்மொழியாய் நின்றதமிழ் போற்றி போற்றி
தேன்மொழியாய் வென்றதமிழ் போற்றி போற்றி
நன்மொழியாய் நடந்ததமிழ் போற்றி போற்றி
நீதிவழி சொன்னதமிழ் போற்றி போற்றி
பன்னாட்டோர் பயின்றதமிழ் போற்றி போற்றி
பக்குவமும் பெற்றதமிழ் போற்றி போற்றி
என்றுமுள அரியதமிழ் போற்றி போற்றி
எழுந்தாளப் பிறந்ததமிழ் போற்றி போற்றி

18

பிறமொழிக்கு வேர்தந்தாய் போற்றி போற்றி
பயன்பாட்டுப் சீபோற்றிதந்தாய் போற்றி போற்றி
அறிவொளியின் அகச்சுடரே போற்றி போற்றி
அமுதமான தமிழ்க்கடலே போற்றி போற்றி
உறவான உயிர்மெய்யே போற்றி போற்றி
உயிரொலியின் அணுத்திறளே போற்றி போற்றி
உறிநெய்யாய் நிறைதமிழே போற்றி போற்றி
உணர்வுக்குள் உயிரலையே போற்றி போற்றி

19

அம்மைதந்த  ஞானமானாய் போற்றி போற்றி
அருமையாகப்  பிறந்ததமிழ் போற்றி போற்றி
செம்மையாகச்  சிறந்ததமிழ் போற்றி போற்றி
சிறகடித்துப்  பறந்ததமிழ் போற்றி போற்றி
நம்நாவை   அசைத்ததமிழ் போற்றி போற்றி
நலம்பெறவே இசைத்ததமிழ் போற்றி போற்றி
மும்மணியாய்  விரிந்ததமிழ் போற்றி போற்றி
முரசுகொட்டி ஒலித்ததமிழ் போற்றி போற்றி

20

பூக்களதன்  தேனானாய் போற்றி போற்றி
புதுமையுடன்  பொலிவானாய் போற்றி போற்றி
வாக்கினிலே  வளர்தமிழே போற்றி போற்றி
வைகையிலே  தவழ்ந்ததமிழ் போற்றி போற்றி
நாக்கினிலே  பாக்களானாய் போற்றி போற்றி
நடையழகில் நிமிர்ந்ததமிழ் போற்றி போற்றி
நீக்கமற  நிறைந்தருள்வாய் போற்றி போற்றி
நிறைமொழியர் பதிகமானாய் போற்றி போற்றி

21

நகரமக்கள் அவைமொழியே போற்றி போற்றி
நலம்தரவே வருவாயே போற்றி போற்றி
மகிழ்வுடனே  மலரவைப்பாய் போற்றி போற்றி
மணிமுடியை அணிந்ததாயே போற்றி போற்றி
நிகரிலாத  ஒலித்தமிழே போற்றி போற்றி
நயமான நறுந்தமிழே போற்றி போற்றி
சிகரத்தின்  அகரமானாய் போற்றி போற்றி
செங்கதிராய் உதித்ததாயே போற்றி போற்றி

22

ஏட்டினிலே பாட்டானாய் போற்றி போற்றி
ஏர்முனையின் கூர்வடிவே போற்றி போற்றி
பாட்டினிலே காட்டாறே போற்றி போற்றி
பாவலரின் நாதமொழி போற்றி போற்றி
நாட்டினிலே நற்றமிழே போற்றி போற்றி
நம்பிக்கை ஊற்றானாய் போற்றி போற்றி
ஈட்டமலர்க் கூட்டமொழி போற்றி போற்றி
ஏந்தியவர் மாந்துமொழி போற்றி போற்றி

23

நல்லதமிழ்க் கிளிமொழியே போற்றி போற்றி
நடைமுறையின் ஒளிமொழியே போற்றி போற்றி
கல்விநலக் கண்திறப்பே போற்றி போற்றி
களப்பணியின் சொல்மொழியே போற்றி போற்றி
வல்லவரை வளரமுதே போற்றி போற்றி
வழிகாட்டும் மொழித்தாயே போற்றி போற்றி
எல்லோர்க்கும் ஒருதாயே போற்றி போற்றி
இலக்கணத்தின் இலக்கியமே போற்றி போற்றி

24

இலக்குணர்த்த நிறைந்ததமிழ் போற்றி போற்றி
இமையாகக் காத்திடுவாய் போற்றி போற்றி
வலம்புரியாய்ச் சிறந்ததமிழ் போற்றி போற்றி
வளர்வதற்கே உரியதமிழ் போற்றி போற்றி
அலகிட்ட பகுப்பழகே போற்றி போற்றி
அடையாளம் செறிந்ததமிழ் போற்றி போற்றி
நலமுரைத்த நாலடியே போற்றி போற்றி
நம்பினார்க்குத் திருக்குறளே போற்றி போற்றி

25

சங்கநாதம் ஒலித்ததமிழ் போற்றி போற்றி
சரஞ்சரமாய் மலர்ந்ததமிழ் போற்றி போற்றி
தங்கத்தேர் புலமைமொழி போற்றி போற்றி
தன்னேரில் ஒலித்தமிழே போற்றி போற்றி
பொங்கிவரும் சிலம்பாறே போற்றி போற்றி
புனிதமுடன் நிலைபேறே போற்றி போற்றி
மங்காத புகழரசி போற்றி போற்றி
மகிழம்பூ மொழியரசி போற்றி போற்றி

26

திருக்குறளின் தெளிவரசி போற்றி போற்றி
திருப்பாக்கள் மொழியரசி போற்றி போற்றி
கருத்தமைதித் திருவுடையாய் போற்றி போற்றி
களஞ்சியங்கள் படைத்ததமிழ் போற்றி போற்றி
இருள்கிழிக்கும் மொழிமலரே போற்றி போற்றி
எழுத்தொலியை அணிந்ததமிழ் போற்றி போற்றி
முரணில்லாச் சிறப்புடையாய் போற்றி போற்றி
முடிவில்லா ஒருமொழியே போற்றி போற்றி

27

தென்மதுரைத் தென்றலானாய் போற்றி போற்றி
தேனுhறும் இன்பமானாய் போற்றி போற்றி
மன்னவரும் போற்றவந்தாய் போற்றி போற்றி
மாமதுரைச் செல்வமகள் போற்றி போற்றி
முன்னிருந்த தமிழியானாய் போற்றி போற்றி
மூச்சாகிப் பேச்சானாய் போற்றி போற்றி
அன்னமென நிறைதமிழே போற்றி போற்றி
அhpயணையின் மொழியரசி போற்றி போற்றி

28

உரைநடையாய்க் கவிதையானாய் போற்றி போற்றி
உரையாடல் விளம்புகின்றாய் போற்றி போற்றி
வரையவரும் உயர்ந்ததமிழ் போற்றி போற்றி
வெல்லவந்த நல்லதமிழ் போற்றி போற்றி
இரையாகாக் கரையுடையாய் போற்றி போற்றி
இறையனாரின் பொற்பாவே போற்றி போற்றி
கரையேறக் கவசமீந்தாய் போற்றி போற்றி
கனினிக்கும் இனியதாயே போற்றி போற்றி

29

காவியங்கள் ஆனதமிழ் போற்றி போற்றி
கொற்றவரும் கற்றதமிழ் போற்றி போற்றி
பாவினங்கள் பூத்ததமிழ் போற்றி போற்றி
பூவனமாய் உள்ளதமிழ் போற்றி போற்றி
நாவினிலே ஏறுதமிழ் போற்றி போற்றி
நாதமொழி கூறுதமிழ் போற்றி போற்றி
கோவிலாக மாறுதமிழ் போற்றி போற்றி
கோட்டையேறி ஆளுதமிழ் போற்றி போற்றி

30

பிறஎழுத்துப் பிழைதவிர்ப்பாய் போற்றி போற்றி
பழுதுபடும் எழுத்தில்லாய் போற்றி போற்றி
உறவான உயிர்த்துடிப்பே போற்றி போற்றி
உடைகின்ற நடையில்லாய் போற்றி போற்றி
இறவாத வரமொழியே போற்றி போற்றி
இறுகிநிற்கும் திறமொழியே போற்றி போற்றி
முறுக்காத உயிர்மெய்யே போற்றி போற்றி
மணிவாச கத்தேனே போற்றி போற்றி

31

சமணரினைக் கவர்ந்ததமிழ் போற்றி போற்றி
சகலருக்கும் பிடித்ததமிழ் போற்றி போற்றி
அமணரவர் அருள்மொழியே போற்றி போற்றி
ஆனைமலை அமர்ந்திருந்தாய் போற்றி போற்றி
தமிழினத்தின் அடையாளம் போற்றி போற்றி
தகுதியுடன் நிலைத்ததமிழ் போற்றி போற்றி
கமகமக்கப் பயிர்விளைத்தாய் போற்றி போற்றி
களம்அமைத்த பாண்டியர்தாய் போற்றி போற்றி

32

ஆட்சிக்கும் உகந்ததமிழ் போற்றி போற்றி
அரசாட்சி புரியுதமிழ் போற்றி போற்றி
மாட்சியிலே சிறந்ததமிழ் போற்றி போற்றி
மணியரசி ஆனதமிழ் போற்றி போற்றி
வேட்பமொழி கவிதைத்தேன் போற்றி போற்றி
வீச்சினிலே மூச்சானாய் போற்றி போற்றி
பாட்டியலின் பதிப்பானாய் போற்றி போற்றி
பயிலரங்க மயிலானாய் போற்றி போற்றி

33

காதுக்கும் இசையானாய் போற்றி போற்றி
கருத்துக்கும் விசையானாய் போற்றி போற்றி
நாதநடை இடம்பிடிப்பாய் போற்றி போற்றி
நடனமாட வடம்பிடிப்பாய் போற்றி போற்றி
ஆதிமகள் அருட்கொடையே போற்றி போற்றி
அருமையான வரம்கொடுப்பாய் போற்றி போற்றி
சேதாரம் அடையாதாய் போற்றி போற்றி
செறுகளத்தின் செங்கதிரே போற்றி போற்றி

34

தென்புலத்தார் உயிh;த்துடிப்பே போற்றி போற்றி
தரணியிதன் தனிப்பிறப்பே போற்றி போற்றி
இன்பநடை ஏற்றதாயே போற்றி போற்றி
இளமையுடன் நிலைத்தாயே போற்றி போற்றி
தொன்மையான இயற்கையொலி போற்றி போற்றி
துறைதோறும் நிறைதுடிப்பே போற்றி போற்றி
நின்றொலிக்கும் நிறைமொழியே போற்றி போற்றி
நிறைஅவையின் மணிச்சிலம்பே போற்றி போற்றி

35

தென்றலாக ஆடுகிறாய் போற்றி போற்றி
தேனாறாய் ஓடுகிறாய் போற்றி போற்றி
முன்வந்து பாடிடுவாய் போற்றி போற்றி
மூச்சினிலே கூடிடுவாய் போற்றி போற்றி
நன்றுபல நாடிடுவாய் போற்றி போற்றி
நாவினிலே ஏறிடுவாய் போற்றி போற்றி
தென்தமிழே முக்கனியே போற்றி போற்றி
தீட்டிவைத்த பாட்டொலியே போற்றி போற்றி

36

எழுத்தென்னும் உடல்கொண்டாய் போற்றி போற்றி
இயங்கிவரும் மடல்கண்டாய் போற்றி போற்றி
முழுத்தகுதி நிலையடைந்தாய் போற்றி போற்றி
மொழிக்குரிய ஒலிப்பரலே போற்றி போற்றி
வழிகாட்டும் இலக்கணத்தாய் போற்றி போற்றி
விழியாகும் மொழித்துணையே போற்றி போற்றி
மொழியாகும் உயிர்மூச்சே போற்றி போற்றி
முச்சங்க முத்தரசி போற்றி போற்றி

37

ஒழுங்கான எழுத்துடையாய் போற்றி போற்றி
உயிரான ஒலியுடையாய் போற்றி போற்றி
எழுத்தொலியை மாற்றாதாய் போற்றி போற்றி
இமைப்போழ்தும் மறவாதாய் போற்றி போற்றி
ஒழுங்கற்று நடக்காதாய் போற்றி போற்றி
உருவெழுத்தின் உள்ளுயிரே போற்றி போற்றி
இழுக்குவழு அகற்றிவந்தாய் போற்றி போற்றி
இடத்துக்கோர் ஒலிமாறாய் போற்றி போற்றி

38

தமிழென்ற அமுதானாய் போற்றி போற்றி
தாய்மொழியாய் எனக்கானாய் போற்றி பேற்றி
அமிழ்தென்றே உணரவைத்தாய் போற்றி போற்றி
அடையாள மரபுடையாய் போற்றி போற்றி
தமிழர்க்குப் பெயர்கொடுத்தாய் போற்றி போற்றி
தவழ்ந்திடவே அடிபதித்தாய் போற்றி போற்றி
தமக்குரிய நிலைமாறாய் போற்றி போற்றி
தவக்கோட்டத் தனிச்சுடரே போற்றி போற்றி

39

கொட்டுமொலிப் பேரிகையே போற்றி போற்றி
கோலமுகத் தூரிகையே போற்றி போற்றி
கட்டிவெல்லக் களிப்பாகே போற்றி போற்றி
கற்பூரப் பெட்டகமே போற்றி போற்றி
பொட்டுவைத்த பொற்குடமே போற்றி போற்றி
பொற்கவசச் சொற்றமிழே போற்றி போற்றி
எட்டுவைத்த இசைத்தமிழே போற்றி போற்றி
எழுச்சிமிகு இயற்றமிழே போற்றி போற்றி

40

நிமிர்நாட கத்தமிழே போற்றி போற்றி
நிறம்மாறா எழுத்துடையாய் போற்றி போற்றி
அமுதாகும் தெம்மாங்கே போற்றி போற்றி
அடிப்படையின் உறுதியொலி போற்றி போற்றி
சமநிலையின் இருப்பானாய் போற்றி போற்றி
சரிவிலாத திறமுடையாய் போற்றி போற்றி
இமயமாக எழுந்துநின்றாய் போற்றி போற்றி
இருப்பதற்கே பிறந்துவந்தாய் போற்றி போற்றி

41

நாவினிலே சுழன்றுவந்தாய் போற்றி போற்றி
நற்றமிழாய் எழுந்துவந்தாய் போற்றி போற்றி
பாவினிலே வடிவெடுத்தாய் போற்றி போற்றி
பாடுமொழிப் படியானாய் போற்றி போற்றி
ஆவிக்குள் ஆவியானாய் போற்றி போற்றி
ஆலயத்தின் வாலறிவே போற்றி போற்றி
மூவரவர் தாய்மொழியே போற்றி போற்றி
முழங்கவந்த மொழிமுரசே போற்றி போற்றி

42

பாவலரின் நந்தவனம் போற்றி போற்றி
பாக்களதன் சொந்தவனம் போற்றி போற்றி
காவியத்தின் சோலைவனம் போற்றி போற்றி
கற்றவரின் கவிதைவனம் போற்றி போற்றி
கூவுகுயில் குரலொலியே போற்றி போற்றி
கோடிமலர்ப் பாவனமே போற்றி போற்றி
நாவலரின் நடையழகே போற்றி போற்றி
நற்கூடல் அவையரசி போற்றி போற்றி

43

அமுதமொழிப் பெருக்கழகே போற்றி போற்றி
அரங்கேறும் இலக்கியமே போற்றி போற்றி
தமிழ்த்தேன்சிந் தாமணியே போற்றி போற்றி
தமிழகத்தின் தவப்பயனே போற்றி போற்றி
நமதுகொன்றை வேந்தனானாய் போற்றி போற்றி
நல்ஆத்தி சூடியானாய் போற்றி போற்றி
நிமிர்நடையின் நேரிசையே போற்றி போற்றி
நற்றிணையின் சொற்றிறமே போற்றி போற்றி

44

முக்கனியின் சக்கரையே போற்றி போற்றி
முத்துமணி மாதுளையே போற்றி போற்றி
அக்காலச் செம்பொன்னே போற்றி போற்றி
ஐந்துமுகப் பொன்விளக்கே போற்றி போற்றி
தக்கதமிழ் அவைமொழியே போற்றி போற்றி
தன்னாட்சி கொண்டதாயே போற்றி போற்றி
திக்கெட்டும் நடந்ததாயே போற்றி போற்றி
திலகமிட்டு நின்றதாயே போற்றி போற்றி

45

சுவைநிறைந்த பொருளாறே போற்றி போற்றி
சுழல்முழக்க நடையாறே போற்றி போற்றி
குவையான கருத்தாறே போற்றி போற்றி
கலங்கரையும் விளக்கொளியே போற்றி போற்றி
அவையமைத்தே ஆண்டதாயே போற்றி போற்றி
அணிதிரளப் பணிதொடர்ந்தாய் போற்றி போற்றி
எவைக்குமிங்கே அயராதாய் போற்றி போற்றி
எழுசீரின் முப்பாலே போற்றி போற்றி

46

பரம்பொருளை அழைத்ததமிழ் போற்றி போற்றி
பராசக்தி தந்தபாலே போற்றி போற்றி
உரியஆணை உருவானாய் போற்றி போற்றி
உயிருக்குள் உயிரானாய் போற்றி போற்றி
வரமான அறமானாய் போற்றி போற்றி
விரித்துரைக்கும் பாட்டியலே போற்றி போற்றி
இரண்டுக்கும் கரங்கொடுத்தாய் போற்றி போற்றி
இலக்கியமாய்ச் சரந்தொடுப்பாய் போற்றி போற்றி

47

பாவேந்தும் சந்தமானாய் போற்றி போற்றி
படித்தவர்தம் சொந்தமானாய் போற்றி போற்றி
மூவேந்தர் முழக்கமானாய் போற்றி போற்றி
மதிப்புடனே பதிப்பானாய் போற்றி போற்றி
பூவேந்தும் புன்னகையே போற்றி போற்றி
பொலிந்துவரும் சிலம்பொலியே போற்றி போற்றி
கோவேந்தும் சொல்லேரே போற்றி போற்றி
குவிந்திருக்கும் இலக்கியத்தேன் போற்றி போற்றி

48

பெரியபுரா ணமானதாயே போற்றி போற்றி
பெருமைக்கும் உரியதாயே போற்றி போற்றி
தரத்தினிலே சிறந்ததாயே போற்றி போற்றி
தமிழ்மக்கள் முகவரியே போற்றி போற்றி
கரங்கூப்பி வணங்குகிறோம் போற்றி போற்றி
கயல்விழியின் இதழ்மொழியே போற்றி போற்றி
அரவணைக்கும் அருமருந்தே போற்றி போற்றி
அகிலாண்ட வல்லிமொழி போற்றி போற்றி

49

மங்கலத்தின் மணிச்சுடரே போற்றி போற்றி
மல்லிகையின் தங்கையானாய் போற்றி போற்றி
பொங்கருவிப் புனலானாய் போற்றி போற்றி
புதுமைக்குப் புதுமையானாய் போற்றி போற்றி
செங்கரும்புச் செவ்வியானாய் போற்றி போற்றி
சித்திரப்பூம் பாவையானாய் போற்றி போற்றி
தங்கத்தின் முதல்தரமே போற்றி போற்றி
தமிழன்னைச் சங்கத்தாய் போற்றி போற்றி

50

அரிவையரகப் பிறந்ததாயே போற்றி போற்றி
அறிவிலுயர் தெரிவையானாய் போற்றி போற்றி
பெருமைமிகு பெதும்பையானாய் போற்றி போற்றி
பேதையாகா மங்கையானாய் போற்றி போற்றி
கருத்துரைக்கும் மடந்தையானாய் போற்றி போற்றி
கடைத்தேற்றும் தாயுமானாய் போற்றி போற்றி
பொருத்தமுடன் நிறைந்துள்ளாய் போற்றி போற்றி
போற்றுமெங்கள் பகவதியே போற்றி போற்றி

51

உயிரெழுத்து பனிரெண்டோய் போற்றி போற்றி
உடல்எழுத்து பதினெட்டோய் போற்றி போற்றி
இயங்காய்த எழுத்துகொண்டோய் போற்றி போற்றி
இருநூற்றிப் பதினாறே போற்றி போற்றி
உயர்மணிகள் ஆய்ந்தமுத்தே போற்றி போற்றி
ஒளிவீசும் மொழியரசி போற்றி போற்றி
மயற்வறுத்த தொகையெட்டே போற்றி போற்றி
மணிமகுடக் காப்பியமே போற்றி போற்றி

52

பாக்களிலே  மலர்ந்ததமிழ் போற்றி போற்றி
புயல்வெள்ளம்  கடந்ததமிழ் போற்றி போற்றி
ஊக்கமுடன்  எழுந்ததமிழ் போற்றி போற்றி
உலாவந்த  உயர்ந்ததமிழ் போற்றி போற்றி
மாக்களையும்  திருத்துதமிழ் போற்றி போற்றி
மனிதனாக்கும் குறளமுதே போற்றி போற்றி
தாக்கமிலாத் தமிழ்த்தாயே போற்றி போற்றி
தங்கமலர் மங்கையானாய் போற்றி போற்றி

53

வடிவமைப்பில்  சிறந்ததமிழ் போற்றி போற்றி
வலம்புரியாய்  ஒலித்ததமிழ் போற்றி போற்றி
முடிவேந்தர் வணங்குதமிழ் போற்றி போற்றி
மொழியரசி  ஆனதமிழ் போற்றி போற்றி
படியேறும்  உயர்ந்ததமிழ் போற்றி போற்றி
பழங்குடியின் முதல்மொழியே போற்றி போற்றி
எடுப்பாக  அமைத்ததாயே போற்றி போற்றி
இல்லகத்துச்  சொல்விளக்கே போற்றி போற்றி

54

காதினிலே  குண்டலத்தோய் போற்றி போற்றி
கைக்குவளை  யாபதியாய் போற்றி போற்றி
பாதத்தில்  சிலம்புகொண்டாய் போற்றி போற்றி
பொற்சேலைக் குறளணிந்தாய் போற்றி போற்றி
மீதொளிர்சிந்  தாமணித்தாய் போற்றி போற்றி
மெல்லிடையில்  மேகலைத்தாய் போற்றி போற்றி
கோதிலாத  காப்பியத்தாய்  போற்றி  போற்றி
கம்பகாதை மணிமுடித்தாய் போற்றி போற்றி

55

அங்கமெலாம் தங்கமானாய் போற்றி போற்றி
ஐந்துநிலப் பாவானாய் போற்றி போற்றி
பொங்கிவரும் தேம்பாவே போற்றி போற்றி
பூத்துவந்த சீறாவே போற்றி போற்றி
அங்கயற்கண் அரசிமொழி போற்றி போற்றி
ஆரமுதப் பேரொளியே போற்றி போற்றி
தங்கிநின்ற நன்னூலாள் போற்றி போற்றி
தங்கரதத் தமிழ்த்தாயே போற்றி போற்றி

56

நாட்டுநடைச் சொல்மொழியே போற்றி போற்றி
நன்முறையின் செயல்மொழியே போற்றி போற்றி
பாட்டுநடைப் பண்மொழியே போற்றி போற்றி
பண்பாட்டுக் கூட்டமொழி போற்றி போற்றி
தோட்டமலர் ஈட்டமொழி போற்றி போற்றி
தூயதமிழ் நாட்டுமொழி போற்றி போற்றி
ஈட்டிமுனை ஏட்டுமொழி போற்றி போற்றி
ஏருழவன் பாட்டுமொழி போற்றி போற்றி

57

இனித்தமுகப் பழுத்ததமிழ் போற்றி போற்றி
இளமைநலம் செழித்ததமிழ் போற்றி போற்றி
உனதுபெயர் எனக்கீந்தாய் போற்றி போற்றி
உச்சரிப்பின் ஒலியனானாய் போற்றி போற்றி
மனதாளும் மொழித்தாயே போற்றி போற்றி
மருவற்ற ஒலித்தாயே போற்றி போற்றி
இனமானம் காத்ததாயே போற்றி போற்றி
இளவட்ட நடைகொண்டாய் போற்றி போற்றி

58

கோவிலாய்என் மனம்கொண்டாய் போற்றி போற்றி
குறும்பாக்கள் அகம்கொண்டாய் போற்றி போற்றி
பூவினத்தின் பாவினத்தாய் போற்றி போற்றி
பாடுகின்ற நாவினத்தாய் போற்றி போற்றி
சேவிக்கும் போற்றியானாய் போற்றி போற்றி
சிற்றிலக்கி யத்தாயே போற்றி போற்றி
காவழகுக் கவின்கொண்டாய் போற்றி போற்றி
காப்பாற்றும் மனம்கொண்டாய் போற்றி போற்றி

59

நம்மவரின் வழக்காறே போற்றி போற்றி
நலப்பாக்கள் இசையாறே போற்றி போற்றி
அம்மைதந்த அருளாறே போற்றி போற்றி
அழகிதழில் தவழ்தமிழே போற்றி போற்றி
கொம்புத்தேன் மருந்தகமே போற்றி போற்றி
களமிறங்கும் விருந்தகமே போற்றி போற்றி
செம்மையுறச் செய்திடுவாய் போற்றி போற்றி
செதுக்கிவைத்த வைரமணி போற்றி போற்றி

60

முதலெழுத்தே சார்பெழுத்தே போற்றி போற்றி
மணியான ஒலிப்பிழம்பே போற்றி போற்றி
எதுகைமோனை இயன்மொழியே போற்றி போற்றி
இயற்கையொலிப் பயன்மொழி போற்றி போற்றி
பொதுவான புனிதமொழி போற்றி போற்றி
பொருந்திடவே எழுந்தமொழி போற்றி போற்றி
மதுரையிலே முகம்மலர்ந்தாய் போற்றி போற்றி
மணிமன்றம் தனிலமர்ந்தாய் போற்றி போற்றி

61

அருகுபோல வேர்விட்டாய் போற்றி போற்றி
ஆல்போல தழைத்துள்ளாய் போற்றி போற்றி
இருப்பினிலே சிறந்துள்ளாய் போற்றி போற்றி
ஈசனருட் கவியுடையாய் போற்றி போற்றி
உருகவைக்கும் வாசகத்தாய் போற்றி போற்றி
ஊட்டுமொழிப் பாட்டுடையாய் போற்றி போற்றி
எரிதழலை குளிரவைத்தாய் போற்றி போற்றி
ஏறுநடை நீச்சடித்தாய் போற்றி போற்றி

62

நாலிரண்டின் நல்லமுதே போற்றி போற்றி
நறும்பாவின் உறவமுதே போற்றி போற்றி
நூலினிலே காரிகையே போற்றி போற்றி
நல்வழியாய் நில்தமிழே போற்றி போற்றி
கோலத்தில் குறைவில்லாய் போற்றி போற்றி
குமரகுருத் தமிழ்மொழியே போற்றி போற்றி
காலம்சொல் பரணியானாய் போற்றி போற்றி
காளமேகக் கவிமழையே போற்றி போற்றி

63

தன்மான அருட்பாவே போற்றி போற்றி
தரங்காட்டும் பொருட்பாவே போற்றி போற்றி
பின்னமிலா எழுத்துடையாய் போற்றி போற்றி
பொருத்தமான நடையுடையாய் போற்றி போற்றி
முன்னேற்ற வழியுடையாய் போற்றி போற்றி
மொழிக்கோட்பா டுடையாயே போற்றி போற்றி
பொன்னான இயல்புடையாய் போற்றி போற்றி
பதினாறின் இலக்கணத்தாய் போற்றி போற்றி

64

இயம்புதற்கே எளியதானாய் போற்றி போற்றி
எடுத்துரைக்க இனியதானாய் போற்றி போற்றி
இயற்கையான மரபுள்ளாய் போற்றி போற்றி
இயல்புமாறா எழுத்தொலித்தாய் போற்றி போற்றி
அயலவர்க்கும் தாயானாய் போற்றி போற்றி
ஆட்சிமொழிக் கால்பதித்தாய் போற்றி போற்றி
உயர்ந்தநிலை உடமைகொண்டாய் போற்றி போற்றி
ஒலித்தமன்ற கடமைகண்டாய் போற்றி போற்றி

65

ஊன்றுநள வெண்பாவே போற்றி போற்றி
உயர்திருக்கை வழக்கமானாய் போற்றி போற்றி
மூன்றுவகைப் பகுப்புடையாய் போற்றி போற்றி
மலர்ந்துவரும் தொகுப்புடையாய் போற்றி போற்றி
சான்றோர்கள் வகுத்தமொழி போற்றி போற்றி
சங்கரனார் ஆய்ந்தமொழி போற்றி போற்றி
ஈன்றோரின் இதமொழியே போற்றி போற்றி
ஏடகத்தின் இறைமொழியே போற்றி போற்றி

66

வல்லினத்தின் வகைமொழியே போற்றி போற்றி
வகைகாட்டும் தொகைமொழியே போற்றி போற்றி
மெல்லினத்தின் சுகமொழியே போற்றி போற்றி
மிகையில்லா முகைமொழியே போற்றி போற்றி
சொல்லினிலே வில்லுடையாய் போற்றி போற்றி
சுடர்வைரக் கல்லுடையாய் போற்றி போற்றி
நல்லினமாம் ஒலியுடையாய் போற்றி போற்றி
நாதமணி இசையுடையாய் போற்றி போற்றி

67

தனக்கென்று அமைப்புடையாய் போற்றி போற்றி
தலபுராண வளமுடையாய் போற்றி போற்றி
மனக்குடிலின் தமிழரசி போற்றி போற்றி
முதிர்ந்ததிரு மந்திரமே போற்றி போற்றி
இனியநாலா யிரத்தேனே போற்றி போற்றி
எழுந்தநந்திக் கலம்பகமே போற்றி போற்றி
தனிப்பாடல் கணைடையாய் போற்றி போற்றி
தமிழ்ச்சங்க மனையுடையாய் போற்றி போற்றி

68

சொல்லிசையைப் பொழிதமிழே போற்றி போற்றி
சுவைத்தேனைப் பிழிதமிழே போற்றி போற்றி
நல்லிசையை வடிதமிழே போற்றி போற்றி
நயநிலையின் கொடித்தமிழே போற்றி போற்றி
வெல்லிசையை விதைத்தமிழே போற்றி போற்றி
விரிந்தேழாய் உதித்ததமிழ் போற்றி போற்றி
மெல்லிசையின் மணிமுடியே போற்றி போற்றி
மீட்டிசையின் உயிர்த்துடிப்பே போற்றி போற்றி

69

அறம்பாடும் அருள்தருவாய் போற்றி போற்றி
அணிவகுக்கும் பொருள்தருவாய் போற்றி போற்றி
திறங்காட்டும் மறம்தருவாய் போற்றி போற்றி
திகட்டாத முக்கனியே போற்றி போற்றி
சிறப்பான பிறப்பானாய் போற்றி போற்றி
சங்கப்ப லகைநின்றாய் போற்றி போற்றி
இறவாத புதுநூலோய் போற்றி போற்றி
ஏந்துபல கோவையளே போற்றி போற்றி

70

பாடுமிசை கூடுதமிழ் போற்றி போற்றி
பேசுமொழி கூறுதமிழ் போற்றி போற்றி
காடுகமழ் கற்பூரம் போற்றி போற்றி
காந்தமொழி ஏந்துதமிழ் போற்றி போற்றி
ஏடுபுகழ் செம்மொழியே போற்றி போற்றி
ஏற்றத்தில் மாற்றமில்லாய் போற்றி போற்றி
மாடமன்றத் தமிழரசி போற்றி போற்றி
மாமதுரைத் தென்றலானாய் போற்றி போற்றி

71

நீடுதுயில் நீக்கவந்தாய் போற்றி போற்றி
நேசையாய்ப் பேசவந்தாய் போற்றி போற்றி
பாடுதமிழ் கோடிதந்தாய் போற்றி போற்றி
பாக்களதன் தாக்கலானாய் போற்றி போற்றி
நாடுபுகழ் சிந்துதந்தாய் போற்றி போற்றி
நம்மாழ்வார் ஆயிரமே போற்றி போற்றி
சூடுபுகழ் நாவரசி போற்றி போற்றி
சங்கத்தார் பாவரசி போற்றி போற்றி

72

ஆய்வாளர் மொழியரசி போற்றி போற்றி
அவையத்தார் திருவரசி போற்றி போற்றி
தாய்ப்பாலாய்த் தவழ்ந்தாயே போற்றி போற்றி
தலைநிமிர வைத்தாயே போற்றி போற்றி
ஓய்ந்திடாமல் விதைப்பாயே போற்றி போற்றி
உயர்கம்பர் மொழித்தமிழே போற்றி போற்றி
ஆய்வுகளைக் கடைவிரித்தாய் போற்றி போற்றி
அமைந்தகளக் கொடைகொடுத்தாய் போற்றி போற்றி

73

தூய்மையுடன்  மொழியானாய் போற்றி போற்றி
தொன்னூலாம் கவசமானாய் போற்றி போற்றி
நோய்நொடிக்கு மருந்துமானாய் போற்றி போற்றி
நுட்பமான விருந்துமானாய் போற்றி போற்றி
வாய்மைக்கு வள்ளுவமே  போற்றி போற்றி
வெண்நிலவை அழைத்தாயே போற்றி போற்றி
தேய்வின்றி  நிலைப்பாயே போற்றி போற்றி
திருவிளையா டல்தமிழே போற்றி போற்றி

74

கல்விமொழிக் காவியமே போற்றி போற்றி
கருத்துமொழி ஓவியமே போற்றி போற்றி
நல்லமொழித்  தாண்டகமே போற்றி போற்றி
நீதிமன்ற ஆண்டகையே போற்றி போற்றி
பல்லாண்டு  வாழவந்தாய் போற்றி போற்றி
பாதுகாப்புப் படையுடையாய் போற்றி போற்றி
சொல்லாற்றல் வீச்சுடையாய்  போற்றி போற்றி
சுகராகப் பேச்சுடையாய் போற்றி போற்றி

75

படித்தவர்க்குப்   பிடித்ததமிழ் போற்றி போற்றி
பழம்பாக்கள் கொடுத்ததமிழ் போற்றி போற்றி
முடிவேந்தர்  தொழுததமிழ் போற்றி போற்றி
முதல்வணக்கம் பெற்றதமிழ் போற்றி போற்றி
படிப்படியாய் உயர்ந்ததமிழ் போற்றி போற்றி
பதினெட்டுக் கணக்குடையாய் போற்றி போற்றி
கொடிபிடித்துக் களங்கண்டாய் போற்றி போற்றி
கம்பகாதை வளம்கண்டாய் போற்றி போற்றி

76

நல்லால  விழுதுடையாய் போற்றி போற்றி
நம்பிக்கைப் பொழுதுடையாய் போற்றி போற்றி
பல்லாண்டு வாழவந்தாய் போற்றி போற்றி
பலகோடி வயதுடையாய் போற்றி போற்றி
வல்லமையில் குறைவில்லாய் போற்றி போற்றி
வெல்லுவழி செல்லுவாயே போற்றி போற்றி
நல்யாப்பின் நாயகியே போற்றி போற்றி
நவில்வார்க்குத் தாயகியே போற்றி போற்றி

77

பிழையில்லாப் பிறப்பானாய் போற்றி போற்றி
பெருமைமிகு தமிழரசி போற்றி போற்றி
தழைப்பதற்கும்  உயர்வடைவாய் போற்றி போற்றி
தகுதிநிலைச் செழிப்புடைவாய் போற்றி போற்றி
உழைத்திடவே  மைந்தருளாய் போற்றி போற்றி
ஒருங்கிணைக்கும் அணியுடையாய் போற்றி போற்றி
அழைக்கின்ற வளமுடையாய் போற்றி போற்றி
அனைவரையும் நினைக்கவைப்பாய் போற்றி போற்றி

78

காவலுக்குத் தாயுடையாய் போற்றி போற்றி
களம்கண்ட வாயுடையாய் போற்றி போற்றி
தேவிமீனாள் திருமொழியே போற்றி போற்றி
திகழ்ந்திருக்கும் அருந்தமிழே போற்றி போற்றி
ஏவுகணைச் சொல்லுடையாய் போற்றி போற்றி
எழுச்சிபெற்ற விழிப்புடையாய் போற்றி போற்றி
கூவுமணிக் குரலுடையாய் போற்றி போற்றி
கொடையாகப் பதங்கொடுத்தாய் போற்றி போற்றி

79

ஊரெல்லாம் உலாவந்தாய் போற்றி போற்றி
உயரமணிச் சிறகுடையாய் போற்றி போற்றி
ஈரமன அறமொழியே போற்றி போற்றி
எழுவயதால் வாடாதாய் போற்றி போற்றி
கூரியதாய்ச் சொல்லுடையாய் போற்றி போற்றி
கதிரவனாய்த் திகழ்ந்திடுலாய் போற்றி போற்றி
சேருமிடச் செல்வமாவாய் போற்றி போற்றி
சிவனடியார் தவமொழியே போற்றி போற்றி

80

முதலாழ்வார் மொழிப்பாவே போற்றி போற்றி
முகம்காட்டும் அந்தாதி போற்றி போற்றி
இதழ்விரித்த மொழிமலரே போற்றி போற்றி
ஈரெட்டு வயதழகே போற்றி போற்றி
கதிர்விரித்த சுடரானாய் போற்றி போற்றி
கலையழகுக் காவியமே போற்றி போற்றி
உதித்துவரும் வழியுடையாய் போற்றி போற்றி
உமையவளின் மொழியுடையாய் போற்றி போற்றி

81

ஆண்டுபல கடந்திருப்பாய் போற்றி போற்றி
அமுதமழை பொழிந்திருப்பாய் போற்றி போற்றி
தூண்களான காவியத்தாய் போற்றி போற்றி
தூயநலம் மேவியதாய் போற்றி போற்றி
பாண்டிநாட்டு உரைநடையாய் போற்றி போற்றி
பயன்பாட்டு வழக்குடையாய் போற்றி போற்றி
கூண்டுக்குள் கிளியாகாய் போற்றி போற்றி
குடியிருக்கும் முடியரசி போற்றி போற்றி

82

சமநிலையை இழக்காதாய் போற்றி போற்றி
சமயங்கள் கடந்தவளே போற்றி போற்றி
தமிழருள்ளத் தாயகியே போற்றி போற்றி
தலைமையிட மலைமகளே போற்றி போற்றி
நமதுமக்கள் நாடியம்மா போற்றி போற்றி
நற்கந்த புராணத்தாய் போற்றி போற்றி
தமிழ்அறிந்தார் தொண்டகத்தாய் போற்றி போற்றி
தரைதட்டி நிற்காதாய் போற்றி போற்றி

83

பாண்டியாpன் நாட்டரசி போற்றி போற்றி
பாவலர்கள் போற்றரசி போற்றி போற்றி
மீண்டுவந்த மின்னலானாய் போற்றி போற்றி
முத்தொள்ளா யிரமானாய் போற்றி போற்றி
ஆண்டமூவர் அன்னையானாய் போற்றி போற்றி
அணிமணியாய் நூல்கண்டாய் போற்றி போற்றி
காண்கின்ற மணிவிளக்கே போற்றி போற்றி
கட்டமைப்பு வெண்பாவே போற்றி போற்றி

84

ஆண்டவரே அறிந்ததாயே போற்றி போற்றி
அரசுபல தொpந்ததாயே போற்றி போற்றி
மீண்டெழுந்து பிறந்ததாயே போற்றி போற்றி
மாலவனை அழைத்ததாயே போற்றி போற்றி
மாண்டவளை உயிர்ப்பித்தாய் போற்றி போற்றி
முதலையிடம் மீட்டதாயே போற்றி போற்றி
தீண்டுநாக நஞ்சொழித்தாய் போற்றி போற்றி
திருப்பதிக அமுதானாய் போற்றி போற்றி

85

நீலகண்டர் சேய்மொழியே போற்றி போற்றி
நாயன்மார் வாய்மொழியே போற்றி போற்றி
மாலவர்தே டருள்மொழியே போற்றி போற்றி
முத்தான சித்தொளியே போற்றி போற்றி
பாலமான பயன்மொழியே போற்றி போற்றி
பயன்பாட்டுச் செயல்மொழியே போற்றி போற்றி
மேலெழுப்பிக் கரைசேர்த்தாய் போற்றி போற்றி
மண்மாரி பொழியவைத்தாய் போற்றி போற்றி

86

வயற்பாட்டாய் மலர்ந்ததாயே போற்றி போற்றி
வளமுகிலாயத் தவழ்ந்ததாயே போற்றி போற்றி
புயலாகப் புறப்படுவாய் போற்றி போற்றி
புல்லுருவி களைந்திடுவாய் போற்றி போற்றி
உயிரோட்டப் பயிர்விளைப்பாய் போற்றி போற்றி
உட்பிணைப்பின் உறவுமொழி போற்றி போற்றி
அயராத வான்குரலே போற்றி போற்றி
அடையாளம் கொடுத்ததாயே போற்றி போற்றி

87

அயல்நாட்டார் கவிமொழியே போற்றி போற்றி
அருளாளர் செயல்மொழியே போற்றி போற்றி
வியன்ஞால எசப்பாட்டே போற்றி போற்றி
வீரமாமு னிவர்தமிழே போற்றி போற்றி
இயங்குமொழி முயற்சியுளாய் போற்றி போற்றி
இசைதந்தே அசைத்திடுவாய் போற்றி போற்றி
வியக்கவைத்த பாசுரமே போற்றி போற்றி
விளக்கேற்றி வைத்திடுவாய் போற்றி போற்றி

88

ஏற்றவர்க்குத் இனியதாயே போற்றி போற்றி
ஏணியாவாய் தோணியாவாய் போற்றி போற்றி
போற்றினார்க்குப் புலமைதந்தாய் போற்றி போற்றி
பொல்லாங்கை எதிர்த்திடுவாய் போற்றி போற்றி
மாற்றார்க்கு மண்டியிடாய் போற்றி போற்றி
மண்பெருமை காத்திடுவாய் போற்றி போற்றி
ஏற்றத்தின் சிகரமானாய் போற்றி போற்றி
இருண்டகாலம் தனைவென்றாய் போற்றி போற்றி

89

திருப்பாவை ஆனதாயே போற்றி போற்றி
திருச்சாழல் தந்ததாயே போற்றி போற்றி
உருவான முத்துமணி போற்றி போற்றி
உயர்வான கொத்துமணி போற்றி போற்றி
அருங்கல்வி மொழியானாய் போற்றி போற்றி
ஆயிரத்தில் ஒருத்தியானாய் போற்றி போற்றி
இருப்பதருள் வள்ளலானாய் போற்றி போற்றி
இனிக்கத்தான் பிறப்பெடுத்தாய் போற்றி போற்றி

90

முச்சங்க மொழிமகளே போற்றி போற்றி
முத்தமிழர் குலமகளே போற்றி போற்றி
ஒச்சமில்லா ஒலிமகளே போற்றி போற்றி
உயிர் கொண்ட ஓவியமே போற்றி போற்றி
கொச்சையிலா வழக்குடையாய் போற்றி போற்றி
கோடியின்பம் அருள்வாயே போற்றி போற்றி
அச்சமிலா அம்பிகையே போற்றி போற்றி
அறிவெனக்கும் அருள்வாயே போற்றி போற்றி

91

கொட்டுமொலிப் பேரிகையே போற்றி போற்றி
கோலமிடும் தூரிகையே போற்றி போற்றி
கட்டழகுப் பெட்டகமே போற்றி போற்றி
கொஞ்சுமொழிப் பிஞ்சுமொழி போற்றி போற்றி
எட்டுவைக்கும் எண்குணத்தாய் போற்றி போற்றி
இம்மையிலே நன்மையானாய் போற்றி போற்றி
பொட்டுவைத்த பொன்மகளே போற்றி போற்றி
பூவனத்தின் பாவனமே போற்றி போற்றி

92

மதுரைநிறை மரகதமே போற்றி போற்றி
மாங்கனிப்பா மருந்தானாய் போற்றி போற்றி
கதம்பமணிக் கவிதையானாய் போற்றி போற்றி
கருத்தாழக் குறிப்புரைப்பாய் போற்றி போற்றி
புதுக்கவிதைப் பூங்காற்றே போற்றி போற்றி
பொதிகைமலைச் சந்தனமே போற்றி போற்றி
இதமான பதமொழியே போற்றி போற்றி
எங்களது முதல்மொழியே போற்றி போற்றி

93

அமுதமொழிக் கீழ்க்கணக்கே போற்றி போற்றி
அசைந்தாடும் மேல்கணக்கே போற்றி போற்றி
நமதினிய நாற்பதானாய் போற்றி போற்றி
நடைதிறந்த தாண்டகமே போற்றி போற்றி
கமகமக்கும் கலம்பகத்தாய் போற்றி போற்றி
கட்டளைக்க ளித்துறையோய் போற்றி போற்றி
சுமக்கவைத்த சிந்துவானாய் போற்றி போற்றி
சுழல்கவிதை முழக்கமானாய் போற்றி போற்றி

94

மங்காத எழுச்சிபெற்றாய் போற்றி போற்றி
மயங்காத மலர்ச்சியுற்றாய் போற்றி போற்றி
சங்கநாதச் சக்தியானாய் போற்றி போற்றி
சவ்வாதே சக்கரையே போற்றி போற்றி
தங்கமான இரட்டையர்பா போற்றி போற்றி
தமிழ்க்கந்தர் கவசமொழியே போற்றி போற்றி
இங்கிருப்போர் கவிதையானாய் போற்றி போற்றி
எழுதவைக்கும் தாயானாய் போற்றி போற்றி

95

மூச்சினிலே உதித்ததமிழ் போற்றி போற்றி
முழங்கிடவே பதித்ததமிழ் போற்றி போற்றி
பேச்சினிலே குதித்ததமிழ் போற்றி போற்றி
பிழையற்று எழுந்ததமிழ் போற்றி போற்றி
நீச்சினிலே விரைந்ததமிழ் போற்றி போற்றி
நச்சினார்க்கி னியதமிழே போற்றி போற்றி
வீச்சழகுப் பேச்செழிலே போற்றி போற்றி
விடையழகு நடைமொழியே போற்றி போற்றி

96

வரலாறு படைத்ததாயே போற்றி போற்றி
வைரமனம் உடையதாயே போற்றி போற்றி
முரணெதிர்த்த முனைப்புடையாய் போற்றி போற்றி
முடங்கிடாத முயற்சியுளாய் போற்றி போற்றி
கரமாகக் கலையுடையாய் போற்றி போற்றி
களத்தினிலே நிகண்டுடையாய் போற்றி போற்றி
மருவற்ற உருவுடையாய் போற்றி போற்றி
மதியாளர் மனதுடையாய் போற்றி போற்றி

97

பொட்டெழுத்தால்  மங்கலமே போற்றி போற்றி
பொருந்துமுயிர்ச் செங்கரும்பே போற்றி போற்றி
கட்டழகுக் கவினுடையாய் போற்றி போற்றி
கற்கண்டாய்ச் சொற்கொண்டாய் போற்றி போற்றி
எட்டுவைக்கும் கட்டுடையாய் போற்றி போற்றி
இதழ்களாக முதலுடையாய் போற்றி போற்றி
சட்டமன்றக் களமுடையாய் போற்றி போற்றி
சிறந்துவரப் பலமுடையாய் போற்றி போற்றி

98

நவில்ந்தாலே நயமுடையாய் போற்றி போற்றி
நயந்தாலே பயன்தருவாய் போற்றி போற்றி
செவிக்குணவு  வழங்குதமிழ் போற்றி போற்றி
சிறப்பாலே உயர்ந்ததமிழ் போற்றி போற்றி
புவியினிலே வென்றதமிழ் போற்றி போற்றி
பொலிவுடனே நின்றதமிழ் போற்றி போற்றி
கவிதையிலே செழித்ததமிழ் போற்றி போற்றி
கலங்காமல் விழித்ததமிழ் போற்றி போற்றி

99

அயலவரை  வியக்கவைத்தாய் போற்றி போற்றி
அரியபணி  இலக்குடையாய் போற்றி போற்றி
இயங்குகின்ற துடிப்புடையாய் போற்றி போற்றி
இயல்பான  எடுப்புடையாய் போற்றி போற்றி
மயற்வறுக்கும்  மறமுடையாய் போற்றி போற்றி
மடைதிறக்கக் கடைதிறப்பாய் போற்றி போற்றி
இயல்புகாக்க   எழுந்திடுவாய் போற்றி போற்றி
இயற்கைதந்த இனியதாயே போற்றி போற்றி

100

தனித்தன்மை  இயல்புடையாய் போற்றி போற்றி
தனக்கென்று வழியுடையாய் போற்றி போற்றி
தினந்தினமே  வளர்கின்றாய்  போற்றி போற்றி
திசையெட்டும் வாழ்கின்றாய் போற்றி போற்றி
மனம்மகிழத் திகழ்தாயே  போற்றி போற்றி
முடியரசி முத்தமிழே போற்றி போற்றி
இனிதுலவ  எழுதமிழே போற்றி போற்றி
இவ்வுலகத் தாய்மொழியே போற்றி போற்றி

101

தடையொழியத் தவழ்ந்ததமிழ் போற்றி போற்றி
தலைச்சங்கம் படைத்ததமிழ் போற்றி போற்றி
இடைச்சங்கம் வளர்த்ததமிழ் போற்றி போற்றி
எழுகடலில் குளித்ததமிழ் போற்றி போற்றி
கடைச்சங்கம்  அடைந்ததமிழ் போற்றி போற்றி
குறளேந்தி அமர்ந்ததமிழ் போற்றி போற்றி
இடையூரைக் களைதமிழே போற்றி போற்றி
எதிர்காலக் கணினியுளாய் போற்றி போற்றி

102

பெற்றவளின்  கொஞ்சுமொழி போற்றி போற்றி
பேன்பம்  விஞ்சுமொழி போற்றி போற்றி
கற்கவைக்கும்  பிஞ்சுமொழி போற்றி போற்றி
கண்திறக்கும் பஞ்சுமொழி போற்றி போற்றி
உற்றநலம் இஞ்சுமொழி  போற்றி போற்றி
உள்ளொளியின் தஞ்சமொழி போற்றி போற்றி
சொற்றமிழாம் மிஞ்சுமொழி போற்றி போற்றி
செந்தமிழாய் வென்றதாயே போற்றி போற்றி

103

காதினிக்க இனிமையானாய் போற்றி போற்றி
கருத்துக்கும் கனிகளாவாய் போற்றி போற்றி
நாதமொழித் தடம்பதித்தாய் போற்றி போற்றி
நடனமென இடம்பிடித்தாய் போற்றி போற்றி
ஆதியொலி வழங்குதமிழ் போற்றி போற்றி
அடலேறாய் விளங்குதமிழ் போற்றி போற்றி
பேதமின்றி நிலைத்ததமிழ் போற்றி போற்றி
பிணியின்றி விளைந்ததமிழ் போற்றி போற்றி

104

நீடுதுயில் நீக்குதமிழ் போற்றி போற்றி
நேரிசையை ஆக்குதமிழ் போற்றி போற்றி
பாடுபட்டார் பாட்டுமொழி போற்றி போற்றி
பழங்காலம் கேட்டமொழி போற்றி போற்றி
மாடநகர் வாழ்க்கைமொழி போற்றி போற்றி
மாமதுரைத் தமிழரசி போற்றி போற்றி
வாடலின்றி வளர்தமிழே போற்றி போற்றி
வரம்கொடுக்க மலர்தமிழே போற்றி போற்றி

105

தங்கமலர் தனிலமர்ந்தாய் போற்றி போற்றி
தலைகொடுக்கத் துணிந்தான்தாய் போற்றி போற்றி
சங்கத்தார் சிங்கமகள் போற்றி போற்றி
சாய்ந்தபலா மீளவைத்தாய் போற்றி போற்றி
பங்குக்குப் பழம்தந்தாய் போற்றி போற்றி
பொற்கிழியை அறுத்தெடுத்தாய் போற்றி போற்றி
பங்காளிச் சண்டைதீர்த்தாய் போற்றி போற்றி
பொற்காசும் வரவழைத்தாய் போற்றி போற்றி

106

பூதத்தாழ் வார்மொழியே போற்றி போற்றி
புறப்பொருள்வெண் பாமொழியே போற்றி போற்றி
வாதவூரார் கோவையே போற்றி போற்றி
வாழ்கயிலை ஞானஉலா போற்றி போற்றி
நீதிமொழி நீலகேசி போற்றி போற்றி
நான்மணிக்க டிகையானாய் போற்றி போற்றி
மூதுரையின் முதுமொழியே போற்றி போற்றி
மூவருலா ஆனதாயே போற்றி போற்றி

107

சிவஞான போதமலர் போற்றி போற்றி
சிவஞான சித்தியகம் போற்றி போற்றி
சிவப்பிரகா சத்தமிழே போற்றி போற்றி
சொக்கநாதர் உலாமுகையே போற்றி போற்றி
கவா;ந்துவிடும் தூதானாய் போற்றி போற்றி
கலம்பகங்கள் தனில்நிறைந்தாய் போற்றி போற்றி
கவலைதீர்க்கும் இசையானாய் போற்றி போற்றி
கந்தவேலன் மொழியானாய் போற்றி போற்றி

108

வீரராக வர்கவியே போற்றி போற்றி
விளையாடல் திருமொழியே போற்றி போற்றி
ஆரமணி இருபாஃவே போற்றி போற்றி
அதிவீர ராமமொழி போற்றி போற்றி
சீரகப்பொய் யாமொழியே போற்றி போற்றி
சிறந்தமுனைப் பாடிமொழி போற்றி போற்றி
பேரருளாய்ப் பிறந்ததாயே போற்றி போற்றி
பிங்கலனின் நிகண்டானாய் போற்றி போற்றி

109

நம்பியாண்டார் நம்பிமொழி போற்றி போற்றி
நாச்சியாரின் நறுந்தமிழே போற்றி போற்றி
செம்மையான தாயுமானாய் போற்றி போற்றி
செழும்பிள்ளைத் தமிழானாய் போற்றி போற்றி
கொம்புத்தேன் அம்மைமொழி போற்றி போற்றி
குகைநமச்சி வாயமொழி போற்றி போற்றி
நம்ஆழ்வார் அந்தாதி போற்றி போற்றி
நடைநடக்கும் சிந்துமொழி போற்றி போற்றி

110

கணிகண்ணன் வெண்பாவே போற்றி போற்றி
கடும்வெப்பை போக்கியதாய் போற்றி போற்றி
மணிவண்ணன் மதித்தமொழி போற்றி போற்றி
மலையரசிக் கலைமொழியே போற்றி போற்றி
வணங்கினாரின் வைரமொழி போற்றி போற்றி
வகைப்படுத்தும் தொகைமொழியே போற்றி போற்றி
குணங்குடியார் கவிதைமொழி போற்றி போற்றி
குமரேசர் வெண்பாவே போற்றி போற்றி

111

பிணிபோக்கும் மணிமொழியே போற்றி போற்றி
பதினாறு கோடியின்தாய் போற்றி போற்றி
அணித்தண்டி அலங்காரி போற்றி போற்றி
ஐந்துநாட்டை ஆள்பவளே போற்றி போற்றி
பணிந்தார்ன் பாமழையே போற்றி போற்றி
பட்டினத்தார் தமிழ்மொழியே போற்றி போற்றி
மணக்குடவர் உரைமொழியே போற்றி போற்றி
முத்தப்பர் தமிழ்வாக்கே போற்றி போற்றி

112

அருணகிரிச் சந்தமழை போற்றி போற்றி
அருள்தர முந்துமொழி போற்றி போற்றி
முருகாற்றுப் படைத்தமிழே போற்றி போற்றி
முத்துமணிச் சித்திரமே போற்றி போற்றி
திருப்பத்தூர் இறைத்தமிழே போற்றி போற்றி
திருவாடு துறைத்தமிழே போற்றி போற்றி
திருநீற்றுப் பதிகமானாய் போற்றி போற்றி
திருவீழி மலைப்பாவே போற்றி போற்றி

113

அரிசிலாரின் எழுச்சிமொழி போற்றி போற்றி
ஆலத்தூர் கிழார்மொழியே போற்றி போற்றி
பரணர்தன் பாட்டுமொழி போற்றி போற்றி
பிசிராந்தை ஏட்டுமொழி போற்றி போற்றி
பெருங்குன்றூர் கிழார்மொழியே போற்றி போற்றி
பெருங்கடுங்கோ தவமொழியே போற்றி போற்றி
மருதனாரின் காஞ்சிமொழி போற்றி போற்றி
முடிநாக ராயமொழி போற்றி போற்றி

114

ஒக்கூர்மா சாத்திமொழி போற்றி போற்றி
ஓரம்போகி யார்மொழியே போற்றி போற்றி
நக்கண்ணை நவில்மொழியே போற்றி போற்றி
நெட்டிமையார் நினைவுமொழி போற்றி போற்றி
நக்கீரர் வழங்குதமிழ் போற்றி போற்றி
நன்னாகர் முழங்குதமிழ் போற்றி போற்றி
பக்குடுக்கைப் பழகுதமிழ் போற்றி போற்றி
பேசிளங்கோ பைந்தமிழே போற்றி போற்றி

115

ஆவூர்கி ழார்தமிழே போற்றி போற்றி
ஆலந்தூ கிழார்தமிழே போற்றி போற்றி
கோவூர்கி ழார்தமிழே போற்றி போற்றி
கபிலர்தன் நேர்மொழியே போற்றி போற்றி
காவேரிக் காரிமொழி போற்றி போற்றி
கல்லாடர் கவின்மொழியே போற்றி போற்றி
பாவேந்தும் பாண்டிமொழி போற்றி போற்றி
பேசுகழாத் தலைமொழியே போற்றி போற்றி

116

எருக்காட்டு ரார்தமிழே போற்றி போற்றி
இடைக்குன்றூ ரார்மொழியே போற்றி போற்றி
ஒருசிறைப் பெ ரியர்மொழியே போற்றி போற்றி
உறையூர்மோ சியார்மொழியே போற்றி போற்றி
பெருஞ்சித்தி ரனார்தமிழே போற்றி போற்றி
பெரும்பதுமர் அருந்தமிழே போற்றி போற்றி
பெருந்தலைச்சாத் தனார்மொழியே போற்றி போற்றி
பேரிச்சாத் தனார்தமிழே போற்றி போற்றி

117

துறையூர்கி ழார்மொழியே போற்றி போற்றி
தாயங்கண் ணனார்தமிழே போற்றி போற்றி
உறையூர்மு டமோசிமொழி போற்றி போற்றி
உலோச்சனாரின் வளத்தமிழே போற்றி போற்றி
உறையூர்கூத் தனார்மொழியே போற்றி போற்றி
ஓரேர்உ ழவர்தமிழே போற்றி போற்றி
உறையூர் தா மோதிரர்பா போற்றி போற்றி
ஊன்பொதியார் உயர்தமிழே போற்றி போற்றி

118

கருவூரார் தண்தமிழே போற்றி போற்றி
காக்கைபாடி னித்தமிழே போற்றி போற்றி
மருதனிள நாகன்பா போற்றி போற்றி
மாங்குடியார் தீந்தமிழே போற்றி போற்றி
இரும்பிடர்த லைத்தமிழே போற்றி போற்றி
ஏறுபொய்கை யார்தமிழே போற்றி போற்றி
நரிவெருஉத் தலைமொழியே போற்றி போற்றி
நல்லாதன் சொற்றமிழே போற்றி போற்றி

119

வெள்ளிவீதி யார்தமிழே போற்றி போற்றி
வன்பரணர் தன்தமிழே போற்றி போற்றி
வெள;ளைக்கு டியார்தமிழே போற்றி போற்றி
வீரைவெளி யனார்தமிழே போற்றி போற்றி
வெள்ளைமாளர் வெல்தமிழே போற்றி போற்றி
வடமோதங் கிழார்மொழியே போற்றி போற்றி
மள்ளனார்தன் மணித்தமிழே போற்றி போற்றி
மதுரகவி மொழித்தமிழே போற்றி போற்றி

120

அந்தமிலாச் சந்தமொழி போற்றி போற்றி
அகவலோசை தந்தமொழி போற்றி போற்றி
சிந்துகவி வந்தமொழி போற்றி போற்றி
செப்பலோசை பூத்தமொழி போற்றி போற்றி
தந்துமகிழ் தாளமொழி போற்றி போற்றி
துள்ளலோசை துலங்குமொழி போற்றி போற்றி
மந்திரச்சொல் எழுத்துமொழி போற்றி போற்றி
மண்டைக்கா டம்மைமொழி போற்றி போற்றி

121

ஆதியிலே  மலர்ந்தமொழி போற்றி போற்றி
அடையாளம் நிறைந்தமொழி போற்றி போற்றி
சாதனைபல செய்தமொழி போற்றி போற்றி
சோதனைகள் வென்றமொழி போற்றி போற்றி
கோதிலாத  தமிழ்மொழியே போற்றி போற்றி
கோட்டையான கவசமொழி போற்றி போற்றி
யாதுமான  தொன்மொழியே போற்றி போற்றி
யாவரையும் கேளிரென்றாய் போற்றி போற்றி

122

அற்புதங்கள் செய்ததாயே போற்றி போற்றி
அகரமென  ஆனதாயே போற்றி போற்றி
சொற்பெருக்கம்  கொண்டதாயே போற்றி போற்றி
சுவையாறாய் உள்ளதாயே போற்றி போற்றி
கற்றவரின்  தமிழன்னை போற்றி போற்றி
கவிவாணர் மொழியன்னை போற்றி போற்றி
பெற்றவரின்  மகிழ்வொலியே போற்றி போற்றி
பகவதிக்குப்  பிடித்தமொழி போற்றி போற்றி

123

ஓசைகளும்  பேசுதமிழ் போற்றி போற்றி
ஒழுக்கமான நேசமொழி போற்றி போற்றி
ஆசைகளின்  அன்புமொழி போற்றி போற்றி
அமைப்பான  பண்புமொழி போற்றி போற்றி
பூசைக்கும் உரியமொழி போற்றி போற்றி
புவிபேற்றப்  பொலிந்ததமிழ் போற்றி போற்றி
மீசைவைத்த தமிழர்தாய் போற்றி போற்றி
மாற்றாரும் போற்றுதமிழ் போற்றி போற்றி

124

தொட்டணைத்தே ஊறுதமிழ் போற்றி போற்றி
துறையெல்லாம் கூறுதமிழ் போற்றி போற்றி
பட்டங்கள் ஆளுதமிழ் போற்றி போற்றி
படித்தவரைப் பிடித்ததமிழ் போற்றி போற்றி
எட்டுவகைக் குணத்தமிழே போற்றி போற்றி
இரந்தாளும் நூற்றமிழே போற்றி போற்றி
பட்டாங்கின் தூய்மொழியே போற்றி போற்றி
பழம்புதுமைக் களமொழியே போற்றி போற்றி

125

நல்லறங்கள் சொல்தாயே போற்றி போற்றி
நல்வழிகள் காட்டுதாயே போற்றி போற்றி
சொல்லெடுத்துத் தரும்தாயே போற்றி போற்றி
சுடரேற்ற வரும்தாயே போற்றி போற்றி
எல்லையில்லாச் செல்வத்தாய் போற்றி போற்றி
இனிமைக்குள் இனிமைநீயே போற்றி போற்றி
இல்லகத்தின் நல்லகமே போற்றி போற்றி
எல்லோர்க்கும் ஒரேதாயே போற்றி போற்றி

126

வெற்றிமாலை சூடுதாயே போற்றி போற்றி
வீரநடை போடுதாயே போற்றி போற்றி
சொற்கொண்டல் ஆனதாயே போற்றி போற்றி
சொக்கவைக்கும் செழுந்தமிழே போற்றி போற்றி
கற்கண்டுக் கனித்தேனே போற்றி போற்றி
கைகூப்பி வணங்குகிறோம் போற்றி போற்றி
பொற்கோவில் பகவதியே போற்றி போற்றி
பாடுகிறோம் பாரம்மா போற்றி போற்றி

■■